விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 28 வியாழக்கிழமை (11.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 174

SATS-TECH ENGINEERS

ICC WORLD TWENTY20 ENGLAND 09

Now available in dishtv & sundirect

New packages & Renewal

Call :-222 5908 / 222 8812

# ஐ.நா. செயலாளரின் பேச்சுக் குறித்து அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை

## பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அழுத்தம் தெரிவிக்குமாறு பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தெரிவித்திருக்கலாம். அதன் காரணமாக ஐ.நாவின் செயலாளர் நாயகம் பொறுப்புடைத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை குறித்து பேசியிருக்கலாம். அதுகுறித்து நாங்கள் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை என அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளரான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாம்களில் உள்ளவர்களில் 57ஆயிரத்து 293 பேர் சிறுவர்கள்

(கொழும்பு)

வடபகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் 57 ஆயிரத்து 293 சிறுவர்கள் இருப்பதாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்டீன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஆயிரத்து 34 சிறுவர்கள் பெற்றோரை இழந்தவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார். இவர்களைத் தவிர இந்த முகாம் களில் 7 ஆயிரத்து 894 விதவைகளும் 3 ஆயிரத்து 100 கர்ப்பிணித் தாய்மார்களும் உள்ளனர்.

அதேவேளை முகாம்களில் காயமடைந்தவர்கள் 11 ஆயிரத்து 873 பேரும் ஊனமுற்றவர்கள் 3 ஆயிரத்து 968 பேரும் உள்ளனர். இடம் பெயர்ந்த மக்களிடையே 3 ஆயிரத்து 689 பேர் அரச அதிகாரிகள் உள்ளனர் எனவும் ஹால்டீன் தெரிவித்துள்ளார்.

(ச-5)

## அமைச்சர் போகொல்லாகமவுடன் யசூஷி அகாசி நேற்றுப் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு வருகைதந்த ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாசி வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவை நேற்று முற்பகல் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து நாடு மீட்கப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராய்வதே இந்த சந்திப்பின் நோக்கமாக அமைந்தது என வெளி (14ஆம் பக்கம் பார்க்க)

## பொருட்களை ஏற்றிய வாகனத் தொடரணி ஏ-9 ஊடாக நாளை யாழ்ப்பாணம் வரும்

### அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து பொருட்களுடன் கூடிய வாகனத்தொடரணி நாளை ஏ-9 பாதை ஊடாக யாழ்ப்பாணம் வரும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதேவேளை இன்று முதல் தினமும் யாழ்ப்பாணத்திற்கு சகல விதமான பொருட்களும் எடுத்து வருவதற்கு அரச அதிபர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து பொருட்கள் எடுத்து வரும் லொறிகள் நாவற்குழி வரையு மே பயணத்தை தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பொருட்களின் உரிமையாளர்கள் யாழ். நகருக்குப் பொருட்களை கொண்டு வருவதற்கு (14ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் காந்தியின் கொலைக்குப்பின் இந்தியாவின் யுத்தம் ஆரம்பித்தது



### சிவ்சங்கர் மேனன் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொலை செய்த பின்னர் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இந்தியா ஆரம்பித்தது என இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் யுத்தத்தை தான் முன்னெடுப்பதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருக் (14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத் தாள்.

## கூட்டமைப்பினருக்கு விடுமுறை வழங்க ஆளும் கட்சி நாடாளுமன்றில் எதிர்ப்பு

(கொழும்பு)


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு மூன்று மாத விடுமுறை வழங்கக்கூடாதென ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்பொழுது வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கே.கஜேந்திரன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி மற்றும் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் சபைக்கு சமுகமளிக்க முடியாததால் மூன்று மாதங்களிற்கு விடுமுறை வழங்குமாறு சக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வந்த கனடா எம்.பி. திருப்பி அனுப்பப்பட்டார்!

### புலிகளுடன் தொடர்பாம்



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்த கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளார். பொப்ரே என்ற உறுப்பினரே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு ஐ.தே.க.பாராட்டு

(கொழும்பு)

இலங்கையில் புரையோடிப் போயிருந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்தமைக்கு ஜனாதிபதி, முப்படைத் தளபதிகள் உள்ளிட்ட படை வீரர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ன பாராட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் (14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஜெ.வின் அக்கறை உலக மகா அதிசயம்

### என்கிறார் முதல்வர் கருணாநிதி

(சென்னை)

“இலங்கைத் தமிழர் விடயத்தில் ஜெயலலிதாவுக்கு தான் அக்கறை என்று கூறுவது, உலக மகா அதிசயம்” என, முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

உலக அதிசயங்களில் உச்சக்கட்ட அதிசயத்தைக்காண, ஜெயலலிதாவின் அறிக்கைகளைப் படித்தாலே போதும். 2004ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்றார். 2006ஆம் ஆண்டும் நிறைவேற்றுவோம் என்றார். 2009ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் ஒரு தேர்தல் அறிக்கை (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தனித்தோ அல்லது வேறு கட்சிகளுடனோ இணைந்து ரெலோ போட்டியிடும்!

## வினோநோகராதலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா நகரசபை மற்றும் யாழ். மாநகர சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாவிட்டால் ரெலோ அமைப்பு தனித்தோ அல்லது வேறு கட்சிகளுடன் இணைந்தோ போட்டியிடலாம். இவ்வாறு ரெலோ சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


தமிழ்மக்களின் எதிர்கால நலன்கருதி வடகிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பது ஒட்டு மொத்த தமிழர்களின் விருப்பமாக உள்ளது.

ஆயுத போராட்ட ஆரம்ப காலங்களிலும், அரசியல் ரீதியான செயற்பாடுகளிலும் நாம் தொடர்ந்தும் தமிழ் இனத்துக்கு விமோசனம் பெற்றுக்கொடுக்காது ஏமாற்றியே வந்திருக்கின்றோம். தவறுகளை உணர்ந்து நாமாக திருந்திக் கொள்ளாவிட்டால், ஒற்றுமைப்படாவிட்டால் எம்மினம் எம்மை ஒதுக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. அதேவேளை நடைபெறப்போகும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு போட்டியிடாவிட்டால் நாம் தனித்தோ அல்லது வேறு கட்சிகளுடன் இணைந்தோ போட்டியிட பின்னிற்கப் போவதில்லை.

குறிப்பாக எம்மிலிருந்து அண்மையில் பிரிந்து சிறிரெலோ என்ற பெயரில் இயங்கும் எமது உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு ஓரணியில் ஒன்றுபட்ட ரெலோ அமைப்பாக செயற்படுவது குறித்து அவர்களுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

அடுத்த வாரம் எமது தலைமைக் குழு இது தொடர்பாக விரிவான பேச்சுக்களை நடத்தவிருக்கின்றது. ஏனைய அமைப்புக்களுடன் இராணுவ, அரசியல் ரீதியான முரண்பாடுகளை நாம் முன்னர் கொண்டிருந்தோம். இன்று நாம் இணைந்து கொள்ள முயன்று வருகின்றோம். இவ்வேளை எமது முரண்பாடுகளைக் களைந்து நாம் ஏன் மீண்டும் இணைந்து செயற்படக்கூடாது என்ற கேள்வியும் பல உறுப்பினர்கள் மத்தியில் இயல்பாக எழுகிறது.

எமது முயற்சிகள் அனைத்தும் தேர்தலை நோக்கமாக மட்டும் கொண்டதல்ல. ஆனால் இரு தேர்தல்களையும் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு செயல்பட பொருத்தமான சந்தர்ப்பமாக இதனைக் கருதுகிறோம். எடுத்த எடுப்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அழைப்பை நிராகரித்து சில தமிழ்க் கட்சிகள் பழையவற்றை ஆராய முனைவது ஆரோக்கியமான தலைமைக்கு அழகானதல்ல என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச-5)



இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் மக்களுக்கு உதவுவதற்காக பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் ஐந்து இலட்சம் நிதியினை வணிகர் சங்கத் தலைவரிடம் வழங்குவதை படத்தில் காணலாம்.

## உயர் தொழில் நுட்ப நிறுவன வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும் நாளையும் ஸ்ரான்லி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கும் நாளை மதியம் 12 மணிக்கும் நடைபெறும் கருத்தரங்கில் ஆர்வமுடையோர் கலந்து கொள்ளலாம் என உயர் தொழில்நுட்பவியல் நிறுவனச் செயலாளர் வி.தயாபரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை இவ் வழிகாட்டல் கருத்தரங்கில் கமநல சேவை உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட கோதுமை மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட கோதுமை மா மாவட்டத்திலுள்ள 24 ப.நோ.கூ.சங்கங்களிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு கிலோ கோதுமை மாவின் ப.நோ.கூ. சங்கங்களின் விற்பனை விலை ரூபாய் 72 எனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவிற்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் இன்று வியாழக்கிழமை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கோதுமை மாவினை கோண்டாவில் அரச உணவுக் களஞ்சியத்தில் உடனடியாக பெற்று பொது மக்களிற்கு தட்டுப்பாடு அற்ற நிலையில் விநியோகிக்குமாறும் மொத்த விற்பனை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை எனவும் அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார். (ஓ)

## கோத்தபாய றெஜிமென்டை உருவாக்கக் கோரிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை கௌரவிக்கும் நோக்கத்துடன் கோத்தபாய றெஜிமென்ட் என்ற இராணுவப் பிரிவை உருவாக்க வேண்டும் என கொழும்பு பௌத்த கோட்பாட்டு சபை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை கௌரவிக்கும் நோக்கத்துடன் கோத்தபாய றெஜிமென்ட் என்ற இராணுவப் பிரிவை உருவாக்க வேண்டும். கோத்தபாய நாட்டுக்குச் செய்த சேவைக்கு மதிப்பளித்து இதனை மேற்கொள்ள வேண்டும்.

கோத்தபாய படையினரை சரியான முறையில் வழிநடத்தியிருந்தார். நாட்டின் எல்லாப் பகுதியையும் படையினர் கைப்பற்றியது பாராட்டத்தக்கது. மகிந்த ராஜபக்ஷவின் பெயர் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்.

துட்டகைமுனு, பராக்கிரமபாகு, கஜபா, அசீலா ஆகியோரின் பெயர்களுடன் மகிந்தவின் பெயரும் பொறிக்கப்பட வேண்டும். மகிந்த நீண்ட காலம் வாழ வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


**மாவட்டச் செயலகம், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம்**

**கழிவுறிஞ்சி வாகன ஓட்டுனர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

ஒப்பந்த அடிப்படையில் (நாளாந்த சம்பளம்) மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

பதவி :- கழிவுறிஞ்சி வாகன சாரதி.

தகைமைகள்:-

(1) க.பொ.த.(சா/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) "A" தரமுடைய வாகன அனுமதிப்பத்திரமுடையவராக இருத்தல் வேண்டும்.

(3) தேக ஆரோக்கியம் உள்ளவராகவும், சிறந்த பண்புகள் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) கழிவுறிஞ்சி வாகனம் செலுத்திய முன்னனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை :- 21 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் :-சுயமாகத் தயாரிக்கப்பட்ட சகல விபரங்களையும் உள்ளடக்கி விண்ணப்பம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 20.06.2009

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "கழிவுறிஞ்சி வாகன ஓட்டுனர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-
திட்டப் பணிப்பாளர்,
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(C-2571)


# தமிழர் விடயத்தில் அரசு பாரபட்சம் காட்டுகிறது

## மேர்சி மிஷன் குற்றச்சாட்டு

(லண்டன்)

தமிழர்கள் விடயத்தில் சர்வதேச மனித நேயச் சட்டங்களுக்கு அமையச் செயற்படாமல் இலங்கை அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாகப் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் மேர்சி மிஷன் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

வன்னியில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான நிவாரணப் பொருட்களை ஏற்றிக் கொண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்ட கப்டன் அலி அல்லது வணங்கா மண் கப்பலை இலங்கை அரசாங்கம் திருப்பி யனுப்பியிருப்பது தம்மை அதிருப்திக்குள்ளாக்கியிருப்பதாக வணங்கா மண் கப்பலை ஏற்பாடு செய்தி ருந்த மேர்சி மிஷன் அமைப்பு தெரிவித்துள் ளது.

நிவாரணப் பொருட்களுடன் அனுப்பப்பட்ட கப்பலில் நிவாரணப் பொருட்கள் தான் உள்ளது என்பதை உறுதிப்படுத்த 111 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து சோதனை நடத்தியதாகச் சுட்டிக் காட்டியிருக்கும் அந்த அமைப்பு, அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் கப்பலை திரும்பிச் செல்லுமாறு உத்தரவிட்டிருப்பது தம்மை அதிருப்தி அடையச் செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இடம் பெயர்ந்த தமிழர்களைப் பராமரிப்பதில் நேர்மையாகச் செயற்படுகிறோம் என்பதை புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கு வெளிப்படுத்தத் தோன்றிய அரிய சந்தர்ப்பமொன்றை இலங்கை அரசாங்கம் நழுவ விட்டிருப்பதாகவும் மேர்சி மிஷன் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கை கடற் பரப்புக்குள் நுழைந்த கப்பல் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வில் லையென இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருந்தது.

அவ்வாறு அந்தக் கப்பல் உரிய ஆவணங்களின்றி சட்டங் களை சரியாக பின்பற்றாமல் இருந் தால் மன்னிப்பு கோருவதாகவும் மேர்சி மிஷன் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழர்கள் விடயத்தை இலங்கை அரசாங்கம் கையாளும் போது சர்வதேச மனிதநேயச் சட்டங்களுக்கமைய செயற்படாமல் தனது உண்மையான நிலைப்பாட்டை காட்டியுள்ளமை துரதிர்ஷ்டவசமானது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது. (ச-5)


**ஈசன் திருமண சேவை**

Regd No: VW/ FIN/R/ 1/13/2008

அன்பார்ந்த பெற்றோர்களே! நீங்கள் எதிர்பார்க்கின்ற மணமக்கள் எமது சேவையில் உள்ள அதிகளவிலான மணமக்களில் இருக்கின்றார்கள். ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்வேறு அரச பதவியினர், வர்த்தக உரிமையாளர்கள், உள்நாடு/ வெளிநாடுகளில் உள்ள வைத்தியர்கள், B.Sc., M.Sc., Ph.d பொறியியலாளர்கள் உட்பட மணமக்கள் ஏராளம். நேரில் வரவும். வரவியலாதவர்கள் தேவையான சகல விபரங்களையும் அனுப்பலாம்.

TP:0712124350,0217900315

வட்டு. வடக்கு, புளியடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

(2824)



**விற்பனைக்கு**

கந்தர்மடம் அரசடி வீதி, கொக்குவில் கே.கே.எஸ். வீதியில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளிற்கு: 0776245267

(2828)


## மாதகல் புனித அந்தோனியார் ஆலய திருவிழா

மாதகல் புனித அந்தோனியார் ஆலய திருவிழா கடந்த 04.06.2009 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் பி.ப. 5.00 மணிக்கு திருச்செபமாலையும் திருப்பலி பூசையும் நடைபெற்று வருகின்றது.

நாளை 12.06.2009 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் நற்கருணை ஆசீர்வாதமும் நாளை மறுதினம் 13.06.2009 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

-ஆலய நிர்வாகத்தினர்

(C-2568)

# இன்று ஒரு தகவல்

## மனைவியின் மனம்

நல்ல கணவன் எப்படி இருக்க வேண்டும் என்று பெண்கள் எதிர்பார்க்கிறார்கள்? இந்த ஆராய்ச்சியில் சிலர் ஈடுபட்டார்கள்.

இத்தாலி, அமெரிக்கா, கனடா நாட்டுப் பெண்களிடம் அபிப்பிராயம் கேட்டு அதையெல்லாம் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

முதலில் 'மென்மை'யைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

வெளியில் உறுதியும் வீரமும் உள்ளவனாக இருக்க வேண்டும். தன் மனைவியிடம் இனிமை கலந்த மென்மை உள்ளவனாக இருக்க வேண்டும். இதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்களாம்.

ஆனால் பலபேர் வீரத்தை விட்டு வாசல்படி தாண்டி வெளியில் வைத்துக் கொள்வதில்லை.

எப்பொழுதாவது ஒரு தடவை கணவன் மனைவியைப் பார்த்து 'நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன்' என்று சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களாம்.

அடுத்தது – மரியாதை

கணவன் முரட்டுத்தனமாகவோ, அலட்சியமாகவோ, மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள்வதை எந்த மனைவியும் விரும்புவதில்லை.

அடுத்தது – கருத்து அறிதல்

மனைவியின் தேவைகளைத் தெரிந்து கொண்டு அவரின் பிறந்த நாளன்று தேவைப்படுவதை பரிசாக கொடுத்துப் பாருங்கள். அதனுடைய மதிப்பே தனி! அவர்களுடைய பெருந்தன்மையை புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் அன்பு காட்டுவது முக்கியம்.

அடுத்த பொயின்ற் – நீதி

கணவன் தான்தான் வீட்டுத்தலைவன் என்ற நினைப்பில், மனைவிக்கு சொந்த செலவுக்கும் வீட்டுச் செலவுக்கும் கொடுக்கும் பணத்தில் சிக்கனம் காட்டக் கூடாது. ஏனெனில் மனைவிமாரின் மனக்குறை என்ன தெரியுமா? அவர் மட்டும் தன்னுடைய செலவுக்கு அதிகமாக பணம் வைத்திருக்கிறார் என்பதுதான்.

அடுத்தது – நன்றியுடமை

தன்னுடைய கணவன் தன்னை என்றைக்கும் காட்டிக் கொடுத்து விடமாட்டார் என்ற நம்பிக்கையை மனைவிக்கு உண்டாக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் இல்லற வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

அடுத்தது – நேர்மை

மனைவிக்கு தெரியாத 'இரகசியம்' சந்தேகத்தை உண்டாக்கும். கணவன் தன்னிடம் பொய் சொல்கிறான் என்ற ஐயப்பாடு வந்தவுடன் அவனுடைய நடத்தை எல்லாமே சந்தேகத்துக்குரியதாகிவிடும்.

அதனால் உண்மையாகவும் – நேர்மையாகவும் கணவன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஆக இப்படி ஏழுவிதமான ஆலோசனைகள் இந்த ஆராய்ச்சி மூலமாக நமக்கு கிடைத்திருக்கிறது. சாதாரண ஆராய்ச்சி இல்லை. சர்வதேச அளவில் நடந்த ஆராய்ச்சி.

ஒருவரையொருவர் செல்லமாக கூப்பிடுவது எப்படி தெரியுமா? இது ஊருக்கு ஊர் வேறுபடுகிறது.

லிதுவேனியாவில் 'காட்டுமலரே' என்பார்களாம். திபெத்தில் 'சின்னஞ்சிறு பன்றியே' என்பார்களாம். வியன்னாவில் 'சிறு நத்தையே' என்றும் செர்பியாவில் 'வெட்டுக்கிளியே' என்றும் அழைப்பார்களாம். யுகொஸ்லாவியாவில் 'சின்னஞ்சிறு புல்லே' என்பார்களாம்.

இதெல்லாம் ஒரு தகலுக்காகத்தான் சொல்கிறேன். இன்றைக்கு தகவலுடைய நீதி என்னவென்றால், குடும்பம் குதூகலமாக இருக்க வேண்டும். ஒருவரையொருவர் நன்றாக புரிந்து கொண்டு நடந்து கொள்ள வேண்டும். சண்டை சச்சரவு, இருக்கக் கூடாது என்பதுதான்.

"எங்கள் வீட்டில் முன்பெல்லாம் தினமும் சண்டை போட்டுக் கொண்டிருப்போம். இப்பொழுது ஒருமாதமாக சண்டைச் சச்சரவே இல்லை!'' என்று பெருமையாக சொன்னார் ஒருவர்.

"அதெப்படி?'' என்று கேட்டேன்.

''சம்சாரம் பிறந்த வீட்டுக்குப் போயிருக்கிறா'' என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு பயிற்சியளிக்க தீர்மானம்

ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுள்ளவர்களை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும், தொலைக்கல்வி நிலையங்களிலும் பயிற்றுவிப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கல்வியமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆசிரிய உதவியாளர்கள் கடமையாற்றும் பாடசாலை மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பேற்படாத வகையில் இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பிரஸ்தாப திட்டத்தின் முதற்கட்டமாக, ஆசிரிய உதவியாளர்களில் ஒரு தொகுதியினர் இரு வருட ஆசிரியர் பயிற்சிக்காக அரசினர் ஆசிரியர் கலாசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்களை தொலைக் கல்வி நிலையங்களுக்கு அனுமதிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆசிரியர்களின் தேவை, மாணவர்களின் கல்வி நடவடிக்கை என்பவற்றை கருத்திற் கொண்டு அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் பாடசாலையொன்றில் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்களில் 50 வீதத்தினர் ஆசிரிய கலாசாலைகளுக்கும் மீதி 50 வீதத்தினர் தொலைக்கல்வி நிலையங்களுக்கும் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

வயதின் அடிப்படையில் ஆசிரியர் உதவியாளர்கள் ஆசிரியர் கலாசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (ஓ-6)

# மூன்று வருட திட்டத்தின் கீழ் வடக்கிலுள்ள கிராமங்களுக்கு மின்சார வசதி

## அமைச்சர் டபிள்யு டி.ஜே. செனவிரத்ன தகவல்

(கொழும்பு)

வடக்கிலுள்ள சகல கிராமங்களுக்கும் மூன்று வருட திட்டத்தின் கீழ் மின்சார வசதி அளிப்பதற்காக 5 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் டபிள்யு டி.ஜே. செனவிரத்ன கூறினார்.

வடபகுதிக்கு மின்சார வசதி வழங்குவதற்கான சில திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு ஏனைய திட்டங்களுக்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் அனுமதியுடன் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதோடு இதன் கீழ் 30 வருடங்களாக யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட மின் மாற்றிக் கோபுரங்கள், மின் விநியோக உப நிலையங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் கிராமிய மின்சாரத் திட்டங்கள் பலவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பான் பொருளாதார ஒத்துழைப்பு வங்கியின் ஆயிரத்து 400 மில்லியன் ரூபா கடனுதவியுடன் 132 கிலோ வாற் மின் மாற்றிக் கோபுரத் தொகுதியொன்று வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை நிர்மாணிக்கப்படவுள்ளது.

இது தவிர 2 ஆயிரத்து 250 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியில் இருந்து சுன்னாகம் வரை 132 கிலோ வாற் மின் மாற்றிக் கோபுரத் தொகுதியொன்று புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வடபகுதிக்கான மின் விநியோக திட்டங்களை மேம்படுத்துவதற்காக 700 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

துரிதமாக மின்சார வசதி அளிக்கும் வகையில் 400 கிராமங்களில் கிராமிய மின்சார திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடபகுதி முழுவதற்கும் துரிதமாக மின்சார வசதி அளிப்பதற்காக 9 ஆயிரத்து 550 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடபகுதிக்கு துரிதமாக மின்சார வசதி அளிக்க 3 ஆயிரத்து 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு, சகல கிராமங்களுக்கும் மின்சார வசதியளிக்கவென 5 ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவும், மின் விநியோக செயற்பாடுகளை முன்னெடுக்க 700 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஓ-6)

## மின் ஒலி ஆரம்ப நிகழ்வு

யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் மின் ஒலி ஆரம்ப நிகழ்வும் களப்பயணச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக இ.ச பேரம்பலம் அன்கோ நிறுவன தொழிலதிபர் இ.ச.பே. நாகரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

## இராசி பலன்


*11.06.2009*
*(வைகாசி 28, வியாழக்கிழமை)*
*சதுர்த்தி முழுவதும்*
*உத்தராடம் முன்னிரவு 9.18 மணிவரை*
*இராகுகாலம் 1.22-2.52 மணிவரை*
*சுபநேரம் 7.22-8.52 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்*


| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், தூரதேசச் செய்தி, காரிய அனுகூலம், தேகநலன். |
| இடபம் | புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, திடீர் பயணம், உறவினர் சந்திப்பு. |
| மிதுனம் | அபகீர்த்தி, எதிர்பாராத பகை, காரிய தடங்கல், போசன சுகம். |
| கடகம் | களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், தனலாபம், செல்வாக்கு. |
| சிங்கம் | செய்தொழில் விருத்தி, ஆரோக்கியம், போசன சுகம், சுவாரஸ்யம் |
| கன்னி | வியாபார விருத்தி,குடும்பக் கவலை, பணக்குறைவு, காரிய தாமதம். |
| துலாம் | வாகன சுகம், நல்ல முயற்சி, சுபசெலவு, உறவினர் சந்திப்பு. |
| விருச்சிகம் | வாக்கு மேன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கீர்த்தி. |
| தனுசு | மனக்கவலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |
| மகரம் | காரிய சித்தி, போசன சுகம், தன்னம்பிக்கை, பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பிரயாணம், சுபசெலவு, கோபப் படுதல், வேலைச்சுமை |
| மீனம் | காரிய நன்மை, தனவரவு, உறவினர் வருகை, போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 100-120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120-130 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 200 | 220 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 80 |
| கோவா | 100 | 110 | 140 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 20 | 30 | 25-60 |
| புடோல் | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 75 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 100 |
| கரணைக் கிழங்கு | 50 | 70 | -- |
| பயிற்றங்காய் | 60 | 70 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | -- |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 5 | 30 | 25-30 |





சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் தொழிற்பயிற்சி நிலைய திறப்பு விழாவில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.அரச அதிபர் க.கணேஷ் நாடாவெட்டி தொழிற் பயிற்சி நிலையத்தை திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, சிதம்பரக் கல்லூரியில் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாபெரும் கலை, விஞ்ஞான , சமூக ஆக்கத்திறன் கண்காட்சி கல்லூரி அதிபர் சி.மகேந்திரன்தலைமையில்நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் மாணவர்களின் கலை,விஞ்ஞான,சமூக ஆக்கத் திறன்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மேற்படி கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை நடைபெற இருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தால் திகதி மாற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ஓ-4)


## புகைப்படப் போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாமிடம் பெற்ற மாணவி



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி செல்வி யசோதா ஸ்ரீஸ்கந்தராஜா மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் புகைப்படப் போட்டியில் வட மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

செல்வி யசோதா ஸ்ரீஸ்கந்தராஜா வட மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக 3 ஆயிரம் ரூபா பணப்பரிசும் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்றமைக்காக 10ஆயிரம் ரூபா பணப் பரிசும் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் கல்வி விழிப்பூட்டல் பிரிவின் ஒழுங்கு படுத்தலுடன் பாவனைக்குப் பின்னரான பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ தேசிய கருத் திட்டத்தின் நிதியுதவியுடன் இப் போட்டி தேசிய மட்டத்தில் நடத்தப்பட்டது. (ஓ




## சுவாமி விவேகானந்தர் சொன்ன கதைகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சுவாமி விவேகானந்தர் சொன்ன கதைகள் பற்றிய நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.க.யோகநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

போஷாக்கு மாதத்தினை முன்னிட்டு யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனத்தால்" உடல் சுகாதாரத்துக்கான போஷாக்கு பாதுகாப்பு" தொடர்பான கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. இந்நிகழ்வு இல 17, விவசாய சேவை, ஒழுங்கை பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் வசந்தி அரசரட்ணம் கருத்துரை வழங்கவுள்ளார்.(ஓ-4)

## விளையாட்டுப் போட்டி

(கைதடி)

கைதடி நாவற்குழி குடும்ப முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் விளையாட்டுப்போட்டி நாளை மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மைதானத்தில் தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சுபத்திரா தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளர் எஸ்.அலெக்சாண்ட் சாள்ஸ் கலந்துகொள்கிறார். (ச-14)

## யாழ்.பல்கலைக்கழக ஹொக்கி சுற்றுப் போட்டியில் கோல்ட் அணி சம்பியனாகத் தெரிவாகியது



(வட்டுக்கோட்டை)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையுடன் பல்கலைக்கழக ஹொக்கி அணி இணைந்து நடத்திய ஹொக்கி சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக கோல்ட் அணி சம்பியனாகத் தெரிவானது.

மேற்படி சுற்றுப்போட்டிகள் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமானது.

தொடரின் 3ஆவது இடத்திற்கான ஆட்டத்தில் யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் அணிமோதியது.

கிறாஸ்கொப்பர்ஸ் அணி வீரர்களின் அபார ஆட்டம் காரணமாக யங்கென்றீஸ் அணிணயை 3:1 என்ற கோல்கள் அடிப்படையில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றி கொண்டு 3ஆவது இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் பிற்பகல் 4.45 மணியளவில் ஆரம்பமானது. இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக கோல்ட் அணியை எதிர்த்து யாழ் ஸ்ரார் அணி மோதியது.மிகவும் விறுவிறுப்பாக ஆடிய யாழ். பல்கலைக்கழக கோல்ட் அணி இடைவேளைக்கு முன்னர் 1கோலினைப் பெற்று முன்னிலையில் இருந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து போட்டி ஆரம்பமானபோது யாழ்.பல்கலைக்கழக கோல்ட் அணி மீண்டும் ஒரு கோலினைப் பெற்று 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் யாழ் ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியனானது. (ஓ-27)

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் நடத்தும் பாடசாலை மட்டக் கல்விக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3மணிவரை நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வித்தியாலய அதிபர், ஆசிரியர்,மாணவர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-4)

## உயர் பாதுகாப்பு வலய மக்களை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச எல்லைக்குட்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடங்கும், குடியிருக்கக்கூடிய சாத்தியமிருந்தும் சேதமடைந்த அல்லது அழிவடைந்த வீடுகளின் உரிமையாளர்களை உலக வங்கி வீட்டுத் திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்காக இன்று வியாழக்கிழமை பதிவுகளை மேற்கொள்ளு மாறு யாழ். பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஓ-30)

## மணவாளக் கோல விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் திருக் கோவிலின் மணவாளக் கோல விழா நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

விழாவில் காலை 7.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கும் பஞ்சமுக விநாயகர் மற்றும் பரிவாரத் தெய்வங்களுக்கும் 108 சங்காபிஷேக கலசாபிஷேகங்கள் இடம் பெற்று தொடர்ந்து திருவூஞ்சல், பஞ்சமுகர் திருவீதியுலா என்பன நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு இன்று வியாழக் கிழமை மாலை 5 மணி முதல் ஆரம்பக் கிரியைகள் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## மஹோற்சவம்

சித்தன்கேணி தனுவோடைப்பதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 27 ஆம் திகதி சனிக் கிழமை நிருத்த உபசார சமர்ப்பணமும், சப்பறத் திருவிழாவும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பஞ்சரத பவனியும்,29 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடராஜர் அபிஷேகமும் ஆனி உத்தர தரிசனமும், முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

## பரிசில் தின விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தினால் க.பொ.த. உயர்தர மாணவர்களை கௌரவிக்கும் 12 ஆவது பரிசில் தின விழா எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.அம்பலவாணர், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் மா. பரமானந்தம், ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச பொறுப்பாளர் இ. செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் 2008 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சங்க தொழிற் பரப்பிலுள்ள சிறப்புச் சித்திபெற்ற 142 பாடசாலை மாணவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஓ-4)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(சாவகச்சேரி)

மட்டுவில் இந்து இளைஞர் மன்ற ஏற்பாட்டில் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் ச. சின்னத்தம்பியின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுநாள் சனிக் கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் சந்திர மௌலிச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு ஓய்வுபெற்ற அதிபரும் மன்றத் தலைவருமான செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

## தமிழ்மொழி மூல கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 6தொடக்கம் தரம் 11 வரையான தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களிடையே தமிழ்மொழிமூலமான கணித, விஞ்ஞான வினா விடைப் போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம்திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மேற்படி போட்டி நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.(ஓ-29)

# இலங்கை அரசியல் அமைப்பை மாற்ற வேண்டுமாயின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

எந்தவொரு நாடும் பரிபூரணமாக அரசியல் அமைப்பைக் கொண்டு இயங்க முடிவதில்லை. காலத்தின் தேவைக்கு ஏற்பட அவ்வமைப்புக்கு திருத்தங்கள் அல்லது பதிலீடுகள் செய்ய வேண்டியுள்ளன. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மிகக் குறுகிய காலத்திற்குள் பல்வேறு திருத்தங்கள் நிகழ்ந்துள்ளதை நாம் காணக் கூடியதாயிருக்கிறது. அமெரிக்க அரசியல் அமைப்பே மாற்றங்கள் எதுவுமின்றி நீண்ட காலத்திற்கு இயங்கி வருகிறது.

நெகிழ்ச்சியற்ற அரசியலமைப்பு இருப்பதே அந் நாட்டின் ஸ்திர அரசியலுக்கு நன்மை பயப்பதாகும். இலங்கை அரசியலமைப்பு நெகிழ்ச்சியற்ற அரசியல் அமைப்பாகும்.

இலங்கை அரசியல் அமைப்பு நெகிழ்ச்சி அமைப்பா? நெகிழ்ச்சியற்ற அமைப்பா? என்பதைப் பற்றி கருத்து வேறுபாடுண்டு. முப்பது ஆண்டுகளுக்கிடையில் பதினெட்டு திருத்தங்கள் இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ளதால் இதனை நெகிழ்ச்சியானதென சிலர் கூறுகின்றனர். ஆயினும் மூன்றில்

## சட்டம் சொல்வது என்ன?

அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் இன்னுமொரு முக்கிய அம்சத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு அரசியலமைப்பு திருத்த இலகு வழிகள் அந்த அரசியல் அமைப்பில் கூறப்பட்டிருப்பின் அவ் அரசியல் அமைப்பு உறுதியானதாக விளங்காது. ஏனெனில், இலகுவான வழியில் அதைத் திருத்தக் கூடியதாக இருப்பதேயாகும்.

இதனை நெகிழ்ச்சியான அரசியல் அமைப்பு என சட்டச் சொல்லில் அழைப்பர். சில அரசியல் அமைப்பை இலகுவில் திருத்தமுடியாது. கடினமான வழிகள் திருத்துவதற்கு கூறப்பட்டிருக்கும். அத்தகைய அரசியல் அமைப்புகள் உறுதியானவை. இதனால், இவ் அரசியல் அமைப்பை நெகிழ்ச்சியற்ற அரசியல் அமைப்பு என்பர். ஆகவே, ஒரு நாட்டில் நெகிழ்ச்சியான அரசியல் அமைப்பு இருப்பதை விட

இரண்டு பாராளுமன்ற அங்கத்தவர்களது ஆதரவும் மக்கள் தீர்ப்பும் சாதகமாக இல்லாத பட்சத்தில் இலங்கை அரசியல் அமைப்பின் சில பிரிவுகளைத் திருத்த முடியாமலிருப்பதால் இதனை நெகிழ்ச்சியற்ற அமைப்பு என்று மற்றும் சிலர் கூறுவர்.

ஆயினும் நெகிழ்ச்சியற்ற அரசியல் அமைப்பு என்பதே கூடுதலாகப் பொருந்துகிறது.

### Amendment of any Provision
### அரசியலமைப்பை திருத்தும்போது

எது எப்படியிருப்பினும், இனி இலங்கை அரசியல் அமைப்பைத் திருத்துவதாயின் எவ்வாறு திருத்தவேண்டும் என அரசியலமைப்புக்கூறுகிறது எனப் பார்ப்போம். இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் அத்தியாயம் XII இன் கீழ் அரசியல் அமைப்பை திருத்துதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அதன்படி 82 (1) " அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை திருத்துவதற்கான சட்டமூலம் அவ்வாறு நீக்கப்படுவதற்கான, திருத்தப்படுவதற்கான அல்லது சேர்க்கப்படுவதற்கான ஏற்பாடுகள் அச் சட்டமூலத்தில் வெளிப்படையாகக் குறிக்கப்பட்டிருப்பதோடு, அந்தச் சட்டமூலம் அரசியலமைப்பைத் திருத்துவதற்கான ஒரு சட்டம் என விரிவுப்பெயரில் (Title) விபரிக்கப்பட்டும் இருந்தால் ஒழிய பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித் தாவில் (Order Paper) இடம்பெறுதலாகாது. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட முடியாது.

### அரசியலமைப்பை நீக்கும் போது
### Redeal of the Constustion

82 (2) இன்படி அரசியலமைப்பை நீக்குவதற்கான சட்டடமூலம் எதுவும் அந்த அரசியல் அமைப்பை மாற்றீடு செய்வதற்கான ஏற்பாடுகள் அந்த சட்டமூலத்தில் அடங்கியிருந்தால் ஒழியவும் அந்த சட்டமூலம் அரசியலமைப்பினை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டம் என்று விரிவுப் பெயரில் (Title) கூறப்பட்டிருந்தால் ஒழியவும் பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித் தாளில் இடம் பெறலாகாது.

மேற்படி பிரிவுகளுக்கமைய சட்டமூலம் அமைந்துள்ளதா? எனப் பார்த்து செயற்பட சபாநாயகருக்கே அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### அரசியலமைப்பு திருத்தம் அல்லது மாற்றீடு எப்படி நடைமுறைக்கு வருகிறது?

82 (5) ஆம் உறுப்புரையின்படி அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டினைத் திருத்துவதற்கான அல்லது அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீடு செய்வதற்குமான ஒரு சட்டமூலம் அதற்கு சாதகமாக அளிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை 150க்கு மேற்பட்டதாக இருக்க வேண்டுமெனக் கூறுகின்றது.

150க்கு மேற்பட்ட அங்கத்தவர்களது ஆதரவுபெற்ற திருத்தச் சட்டமூலமே நடைமுறைக்கு வரும். இல்லையேல் நடைமுறைக்கு வராது.

ஆயினும் பின்வரும் உறுப்புரைகளில் திருத்தம் 150க்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதுடன் மக்கள் தீர்ப்பு (Approved by the Peoples at a Referendum) ஒன்றினால் மக்களால் அங்கீகரிக்கப்பட்டும் இருக்கவேண்டும்.


**சட்டத்தரணி கே.ஜி.ஜோன்**

உறுப்புரை 1,2,3,6,7,8,9,10,11,30. 62 என்பனவாகும். இவ்வுறுப்புரைகளுள்ளேயே ஒற்றை யாட்சி,தேசியக்கொடி, தேசிய கீதம். தேசிய தினம், பௌத்த மதத்தைப் பேணிக் காக்கும் அரசியல் கடமையும் அடங்குகி ன்றது. மேலும் , பாராளுமன்றத்தில் ஆயுட் காலத்தை நீடித்தல். ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடித்தல் என்பன இப் பிரிவுக்குள்ளேயே அடங்கியுள்ளன.

ஆகவே, மேற்படி முக்கிய அரசியலமைப்பு தூண்களை மாற்றீடு செய்ய வேண்டுமானால் 150 பாராளுமன்ற அங்கத்தவர்களது ஆதரவும் மக்கள் தீர்ப்பும் அவசியமாகிறது. (தொடரும்)




எவர்சைன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மலர் சின்னையா வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:- அலுவலக செய்தியாளர்)



தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கொடிவார நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் நிதி வழங்குவதையும் கரவெட்டி பிரதேச சம்மேளனத் தலைவர் பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம். (படம்:-வடமராட்சி நிருபர்)




வலிகாமம் கல்வி வலய செயற்றிட்ட அலுவலரால் ஒழுங்குசெய்யப்பட்டு மூளாய், வேரம், ஐக்கிய இளைஞர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான செயலமர்வில் வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் உரையாற்றுவதையும், முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, சமூகசேவை அலுவலர் உ.செல்வம், வட்டு கார்த்திகேய வித்தியாலய அதிபர் ந.சிவசுப்பிரமணியம்,சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி இ.பானுமதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொதுநூலகத்தின் நிறைவு நாள் நிகழ்வில் மாணவிகள் இறைவணக்கப் பாடல் இசைப்பதையும், இளைப்பாறிய அதிபர் மயில்வாகனம், முன்னாள் திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம், நுணாவில் கணேச வித்தியாலய அதிபர் திருமதி சாந்தநாயகி நகுலேஸ்வரன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி நிருபர்)

# இடம் பெயர்ந்து புத்தளத்தில் தங்கியுள்ளோர் விரைவில் மீள் குடியமர்த்தப்படவுள்ளனர்

## பசில் எம்.பி தகவல்

(கொழும்பு)

மீள்குடியேற்றம் செய்யப்படுவதில் அடுத்த கடடமாக மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்திலுள்ள மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப் படவுள்ளனர். இதற்காக ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என ஜனாதிபதியின் ஆலோசகரும், பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார், முசலி பிரதேச செயலக பிரிவின் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளுக்கென 800 மில்லியன் ரூபாவை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அத்துடன் நானாட்டான், முசலியை இணைக்கும் அருவியாறு பாலத்தின் நிர்மாணப் பணிகளை இன்னும் இரண்டு வாரத்தில் ஆரம்பிக்குமாறும்' ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஏழு கிராம சேவகர் பிரிவுகளிலும் 561 குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முசலி, அரிப்பு கிராமத்திலுள்ள புனித செங்கோல் அன்னை தேவாலய முன்றலில் நடைபெற்ற வைபவத்தில் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டார். மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பசில் ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றுகையில்,

தெற்கையும், வடக்கையும் இணைக்கும் முதலாவது நகரமாக முசலி திகழ்கிறது. புத்தளம் முதல் எழுவன்குளம் வழியாக வரும் பாதையில் முதலாவதாக சந்திக்கும் பிரதான நகரமாக முசலி நகரம் அமைவது. சந்தோசத்தை கொடுக்கிறது.

முசலி மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு சற்று தாமதங்கள் ஏற்பட்டன. இதற்காக ஜனாதிபதி உங்கள் அனைவரிடமும் தனது கவலையை தெரிவித்துக்கொள்வதாக கூறினார். இதற்கு ஈடுசெய்யும் வகையில் மன்னார் அரச அதிபரினால் முன்வைக்கப்பட்ட முசலி பிரதேச செயலகப் பிரிவு அபிவிருத்தி, உட்கட்டமைப்புக்காக மதிப்பீடு செய்யப்பட்ட 800 மில்லியன் ரூபாவையும் குறைவின்றி உடனடியாக வழங்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கிவிட்டார்.

இடம்பெயர்தலும், அகதி முகாம்களில் தங்கியிருப்பதும் இன்று நேற்று நடைபெற்றதல்ல. 20,30 வருடங்களாக மாறி மாறி மக்கள் அகதிமுகாம்களில் இருக்கின்றனர். மலையக மக்களும் கடந்த காலங்களில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் குடிபுகுந்தனர். அவர்களும் அகதிகளாக இடம் பெயர்ந்து வவுனியா பகுதியில் தஞ்சமடைந்திருந்தனர். இதனை சில மலையக தலைவர் இன்று மறந்திருந்தாலும் நாம் மறந்து விட வில்லை என பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## மன்னார் நகருக்குள் வருபவர்களுக்கு விசேட 'பாஸ்' நடைமுறை அமுலில்

(கொழும்பு)

வெளிமாவட்டங்களில் இருந்தும் மன்னார் தீவுப்பகுதிக்கு வெளியில் இருந்தும் மன்னார் நகர் பகுதிக்கு வரும் மக்களுக்கு கடற்படையினர் புதிய பாஸ் ஒன்றினை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளனர்.

மேற்படி பிரதேசங்களில் இருந்து மன்னார் நகருக்குள் வரும் மக்களின் தேசிய அடையாள அட்டைகள் கோட்டை சோதனை நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கடற்படையினரின் சோதனை நிலையத்தில் கையளித்த பின்னர் பாஸ் ஒன்று வழங்கப்படுகின்றது.

இப்பாஸுடன் மன்னார் நகருக்குள் வந்து தமது அலுவல்களை முடித்துவிட்டு வீடுதிரும்பும் போது சோதனைச் சாவடியில் வழங்கப்பட்ட பாஸை அங்கு கையளித்துவிட்டு அடையாள அட்டையைப் பெற்றுச் செல்ல வேண்டி இருப்பதாகவும் இதனால் தாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஓ-6)

## செவ்வாய் சனியைப் பார்ப்பதால் 22ஆம் திகதி கடல் கொந்தளிப்பு கடுமையாக இருக்கும்

### சென்னை ஜோதிடர் எச்சரிக்கை

(சென்னை)

கடந்த 9 நாட்களாக கடல் கொந்தளிப்பாக காணப்படுகிறது. இதனால் கடலோர பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 22ஆம் திகதி திங்கட்கிழமை கடல் கொந்தளிப்பு மிகவும் கடுமையாக இருக்கும் என்று எச்சரிக்கிறார் பிரபல ஜோதிடர் பிரம்ம ஸ்ரீ எம்.எஸ்.ஆர்.மணிபாரதி.

அவர் 22ஆம் திகதி அன்று கிரக நிலைகள் பற்றியும் கடல் கொந்தளிப்பு குறைவதற்கான பரிகாரம் பற்றியும் கூறியதாவது,

செவ்வாய் சனியைப் பார்க்கும் காலங்களிலும் செவ்வாய் சனியோடு இணையும் காலங்களிலும் செவ்வாய் சனியை கடக்கும் காலங்களிலும் பூமியில் மாற்றங்கள் நடைபெறுகின்றன. பூமிக்கு காரகனாக செவ்வாய் தாவரங்கள், வனம், கடல் சார்ந்த பகுதியின் பொறுப்பு தானியாக இருக்கும் சனியைப் பார்க்கும் போது கடல் சார்ந்த பகுதிகளில் கடல் கொந்தளிப்பு சீற்றங்கள் ஏற்படும்.

தற்போது செவ்வாய் தனது சொந்த வீடான மேஷத்தில் இருந்து 5ஆம் பார்வையான சிம்மத்தில் இருக்கும் சனியை பார்ப்பதால் கடல் சீற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த ஒரு வார காலமாக சீறிக்கொண்டிருக்கும் கடலின் சீற்றம் 22ஆம் திகதி வரை ஆங்காங்கே வேகமாகஇருக்கும். பொதுவாக செவ் வாய்க்கு 4,7,8தான்பார்வை என்றாலும் சிறப்பு பார்வையாக 5ஆம் பார் வையே இந்த கொடுமையை செய்கிறது.

22ஆம் திகதி (திங்கட்கிழமை) அன்று சந்திரன் செவ்வாயின் நட்சத்திர காலில் வந்து சூரியனோடு இணைவதால் அன்று ஏற்படும் அமாவாசை தன்மைக்கும் செவ் வாய் தனித்திருக்கும் சனியை 5ஆம் பார்வையாக பார்ப்பதால் கடல் சீற்றம் மிகவும் அதிகமாக இருக்கும்.

சூரியனும் சந்திரனும் மிதுனத்தில் இருப்பது அவ்வீட்டின் அதிபதி புதன் 12இல் மறைந்து இருப்பதும் கடலின் உக்கிரத்துக்கு காரணமாகும். இதனால் இந்த அமாவாசை தினத்தில் கடலில் நீராடுவதை தவிர்ப்பது நல்லது என்றார்.

கடல் கொந்தளிப்பு குறைய செய்ய வேண்டிய பரிகாரங்கள் பற்றி தெரிவிக்கையில், அதிதேவதையாக இருக்கக் கூடிய முருகப்பெருமானுக்கு சிறப்பு வழிபாடு செய்வதன் மூலம் இந்த சீற்றத்தை தணிக்கலாம்.

பொதுவாக 8ஆம் திகதி என்பது சனியினுடைய திகதியாக இருப்பதால் 8ஆம் திகதி கடல் சீற்றம் அதிகமாக இருக்கும். உதாரணமாக கடந்த 2004ஆம் ஆண்டு சுனாமி வந்த திகதி 26தான். இதன் கூட்டுத் தொகை 8ஆகும் எனவே தான் அன்றைய தினம் மிகப் பெரிய அழிவு ஏற்பட்டது. (ஓ-6)


## சாவகச்சேரி இலங்கை வங்கி கிளையில் தன்னியக்க பணமாற்று இயந்திரம் (ATM) அறிமுகம்

யாழ். குடாநாட்டில் இலங்கை வங்கியின் (ATM) சேவைகள்



✦யாழ். அதி மேற்தரக்கிளை
✦யாழ். போதனா வைத்தியசாலை
✦யாழ். இரண்டாம் மேற்தரக்கிளை
✦திருநெல்வேலி
✦சுன்னாகம்
✦மானிப்பாய்
✦அச்சுவேலி
✦பருத்தித்துறை
✦நெல்லியடி

தென்மராட்சி வாடிக்கையாளருக்கான 10 ஆவது (ATM) இயந்திரத்தை சாவகச்சேரி கிளையில் ஆரம்பித்து வைப்பதன் மூலம் இலங்கை வங்கி பெருமகிழ்ச்சி அடைகிறது.

காலம்: 11.06.2009 வியாழன் காலை 9.30 மணி

ஆரம்பித்து வைப்பவர்: திரு .ந.சிவரட்ணம்
(உதவிப்பொதுமுகாமையாளர், வடமாகாணம்)

மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிப்பதுடன் இச்சேவையின் மூலம் பயன்பெறுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி
சாவகச்சேரி.

(சி/2566)


## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ✦ 01 ✦ 01 ✦ 1954

மறைவு ✦ 07 ✦ 06 ✦ 1993



திதி சதுர்த்தி -11.06.2009

அமரர்

### திருமதி நகுலேஸ்வரி நகுலராசா (நகுலேஸ்)

(நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை
அம்பன், குடத்தனை, வடமராட்சி கிழக்கு)

பதினாறு ஆண்டுகள் என்ன
எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும்
எம் உள்ளத்தில் உங்கள் நினைவுகள்
விட்டகலாது என்றும் உங்கள் சாந்திக்காக
இறைவனை இறைஞ்சி நிற்கும்

கணவர், அன்பு மகன்
தேவகாஸ், பெறாமக்கள்
மருமக்கள், சகோதர,
சகோதரிகள், மைத்துவர்-
மைத்துனிகள், மாமன்மார்,
மாமிமார்கள் மற்றும்
உறவினர்கள்

மு.நகுலராசா
நகுலேஸ்வரி அரைக்கும் ஆலை,
அம்பன்.
தொ.பே.060 221 3002

(2825)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 19✦02✦1918
உதிர்வு 12✦05✦2009

அமரர்

### அம்பலவாணர் இரத்தின சபாபதி

*பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
அன்பால் அரவணைத்து ஆசை மொழியூட்டி
மன்னுபுகழ் கீர்த்தியுடன் வாழவைத்த தெய்வமே !
மீளாத்துயில் கொண்டு முப்பத்தொரு நாட்கள் சென்றாலும்
அகல வில்லை உங்கள் நினைவுகள்....*

இன்று 11.06.2009 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெசவ்ாளர் ஒழுங்கை,
இருபாலை வீதி,
கோண்டாவில்.

குடும்பத்தினர்

(சி/2468)

# தரம் –5 புலமை பரிசில் பரீட்சை– 2009

தயாரிப்பு: ஆரம்பக்கல்வி அலகு
கல்வி அபிவிருத்திப் பிரிவு
யாழ்ப்பாண கல்வி வலயம்

## மாதிரி வினாத்தாள் -4

வினாத்தாள் II

நேரம் :-1 மணி
15 நிமிடங்கள்

அன்று சித்திரைப்புத்தாண்டு தினம். எமது ஊரிலுள்ள பாரதி சன சமூக நிலையத்தினரால் ஈருருளி ஓட்டப் போட்டி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. சனசமூக நிலையம் அமைந்துள்ள இடம் வண்ண வண்ண கடதாசிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சின்னஞ் சிறிய சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை அப்போட்டியினைக் காண கடல் அலை போல திரண்டு வந்திருந்தனர்.

நானும் எனது பெற்றோருடன் அங்கு சென்றிருந்தேன். சீரும் சிறப்பும் மிக்க அப்போட்டியினை சன சமூக நிலையத் தலைவர் பச்சைக் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார். வரிசையாக நின்ற ஈருருளிப் போட்டியாளர்கள் விறுவிறுவென காற்றாய்ப் பறந்து போனர்கள். சில போட்டியாளர்கள் ஈருருளிகளுடன் மோதுண்டு ஓடி விழுந்தார்கள். குமணன் என்ற போட்டியாளர் விரைவாக ஓடி வந்து முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார். நானும் அப்போட்டியினை பார்த்த மகிழ்ச்சியில் வீடு திரும்பினேன்.

1) இப்பந்தியானது எந்த விடயத்தினை விபரிப்பதாக அமைகின்றது.

2) மேற்படி போட்டியானது எப்போது? எங்கே இடம் பெற்றது.

3) அடுக்கு மொழிச் சொல்லை எழுதுக.

4) பந்தியில் கூறப்பட்ட உவமைச் சொல்லை எழுதுக.

5) இரட்டைக் கிளவிச் சொல்லினை எழுதுக.

6) தாய், தந்தையைக் குறிக்கும் பொதுச் சொல் எது?

7) "காற்றாய் பறந்து போனார்கள" என்பதிலிருந்து நீ விளங்கிக்கொள்வது யாது?

8) இங்கு தரப்பட்டுள்ள வினையெச்சச் சொல் எது?

9) உயர்திணை, படர்க்கை, பன்மை, பெயர் சொல் ஒன்று தருக?

10) ஈருருளி என்ற சொல் குறிப்பது எதனை.

11) பந்தியில் தரப்பட்டுள்ள இணை மொழிச் சொல் எது?

12) மகிழ்ச்சி என்பதன் ஒத்த சொல் தருக.

(12x1 = 12 புள்ளிகள்)

02.பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

1) போராடிய/ அகிம்சை வழியில்/ வெள்ளையருக்கு/ மாமனிதர்/ ஆவார்/ மகாத்மா காந்தி/ எதிராக

11) நெற்றி/ நிலத்திலே/ உழைத்தான்/ தொழிலாளி/ சிந்தி/ வியர்வை

(2x2=4 புள்ளிகள்)

03) பின்வரும் தொடர்களினால் உணர்த்தப்படும் கருத்தை எழுதுக.

1) நகமும் சதையும் போல

11) நாக்கு தெறிக்கப் பேசுதல்

(2x2=4 புள்ளிகள்)

04. பின்வரும் கருத்திற்கு பொருத்தமான தனிச் சொல்லை தருக.

1) முதலாம் ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா

11) நிலத்தின் கீழ் அமைக்கப்படும் இரகசியப் பாதை

(2x2=4 புள்ளிகள்)

05. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை தருக.

1) நகரம் 11) கடல் 111) அன்னாசிப்பழம் 4) விமானநிலையம்

(1x4=புள்ளிகள்)

06. பின்வருவனவற்றின் கருத்தை தமிழில் எழுதுக.

1) Iam going out
ii. I live my Country
iii. Are you ready

(1x3=புள்ளிகள்)

07) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தினை தமிழில் தருக.

1) மம பத் கனவா

..........................................................

2) தாத்தா மட்ட கத்தா கரனவா

..........................................................

3) அப்பி தெமழ இகெனகன்னவா

..........................................................

4) மல்லி எனவா

..........................................................

(1x4=புள்ளிகள்)


08. சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1)மஞ்சள் பின்னணியுடன் காணப்படும் இவ் வீதிச் சமிக்ஞையினால் வெளிப்படுவது யாது?




i)பிள்ளைகள் பாதையைக் கடக்கும் இடம் முன்னால்
ii)பாதசாரிகள் பாதையைக் கடக்கும் இடம் முன்னால்
iii)விரைவாக பாதையைக் கடக்கவும்
iv)பாதசாரிகள் பாதையைக் கடக்கும் இடம்

2) இக்குறியீடு காணப்படும் இடம்.



i)கண்ணாடிப்பொருட்கள்காணப்படும் பொதி
ii) வைத்தியசாலை
iii) பாடசாலை

3)




இக் குறியீட்டின் மூலம் விளக்கப்படும் இடம்
i)வியாபார நிலையம்
ii)சிற்றுண்டிச்சாலை
iii)சமையலறை
iv)வாகனம் நிறுத்தும் இடம்

4) இவற்றில் மிகத் திருத்தமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.



(1) (2) (3) (4)

5) தேசிய இலச்சினையில் வாளேந்திய சிங்கம் குறித்து நிற்பது
i) வீரம் ii) தர்மம்/ நீதி iii) சௌபாக்கியம்

6) பல்வலியைக் குறைக்கப் பயன்படுத்தும் தைலம் எது,
i) கறுவாத் தைலம்
ii) கராம்புத்தைலம்
iii) விக்ஸ்தைலம்

7) இலையான் முட்டைகளின் நிறம் என்ன?
i) கறுப்பு
ii) மஞ்சள்
iii) வெள்ளை

8) இறைச்சி சமைக்கும் போது இறைச்சியை மென்மையாக்க பயன்படுத்தப்படுவது எது,
i)இரம்பை
ii)கறுவா
iii)பப்பாசிக்காய்

9) இலங்கையில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு அபாயத்திற்கு உட்படும் மாவட்டம் எது.
i) யாழ் மாவட்டம்
ii) இரத்தினபுரி
iii) மன்னார்.

10) உலகிலேயே காற்றாலை மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் நாடு
i) ஜப்பான்
ii) இலங்கை
iii) சீனா

11)பொதுவாக சந்திர கிரகணம் தோன்றும் தினம்
i) அமாவாசை
ii) பௌர்ணமி
iii) வளர்பிறை அட்டமி

12)கரப்பந்தாட்ட விளையாட்டுக்கான ஒரு குழுவில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை
i) 6 ii) 7 iii) 12

13) வண்ணத்துப்பூச்சி தாவரத்தின் எப்பகுதியில் முட்டையிடும்.
i)இலையின் கீழ்ப்பகுதி
ii)இலையின் மேற்பகுதி
iii)தாவர அடிப்பகுதி

14) உருளைக்கிழங்கில் உருவங்கள் வெட்டி செய்யப்படும் ஆக்கம் எது?
i) கொலாச்
ii) அச்சுப்பதித்தல்
iii) அல்பனா

15) சிறு மீன்களை பிடிப்பதற்கு பயன்படும் கூடைவடிவில் அமைந்த உபகரணம்.
i)நாம்புவ
ii)அத்தாங்கு
iii)கரைவலை

(1x15=புள்ளிகள்)

09. பின்வரும் இசைக் கருவிகளின் பெயர்களை எழுதுக.



(1x4=புள்ளிகள்)

10. பின்வரும் பிராணிகளின் பெயர்களை எழுதுக.



(1x4=புள்ளிகள்)

சரியான விடையினைக் கணித்து எழுதுக.

11. குமாரிடம் 36 மாம்பழங்கள் உள்ளன. அவற்றில் 2/4 பங்கினை தம்பியிடம் கொடுத்தான் ஆயின் தம்பியிடம் கொடுத்த பழங்கள் எத்தனை?

..........................................

12. 23:25 மணித்தியாலம் என்பதனை சாதாரண நேரத்தில் தருக.

..........................................

13. 2/6 + 1/4= ..........................................

14. 8 தோடம்பழங்களில் 500 ml யூஸ் பெறலாம்.
3l யூஸ் பெற எத்தனை தோடம்பழங்கள் தேவை?

..........................................

15. 8 மீற்றர் துண்டுகள் 12 வெட்டிய பின்னர் 220 மீற்றர் துணியில் மிகுதி எவ்வளவு?

..........................................

16.  பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு யாது?

..........................................

17. பின்வரும் அட்டவணையின் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.

| பெயர் | பிறந்த திகதி | உயரம் | நிறை |
|---|---|---|---|
| வாசன் | 1980.10.24 | 104cm | 46kg |
| சபேசன் | 1980.09.02 | 115cm | 40kg |
| மயூரி | 1985.04.10 | 90cm | 38kg |
| குமார் | 1985.10.1 | 1m 20 cm | 36kg |
| கம்சா | 1987.05.08 | 1m 15 cm | 40kg |
| சுகுமார் | 1987.12.31 | 98cm | 35kg |

1) வயது கூடிய பிள்ளையின் பெயர் யாது?
..........................................

2) வயதில் மிகக் குறைந்த பிள்ளையின் பெயர் யாது?
..........................................

3) கம்சாவின் உயரத்தினை cm இல் குறிப்பிடுக?
..........................................

4) வாசனின் நிறைக்கும் சுகுமாரின் நிறைக்கும் இடையிலான வேறுபாடு யாது?
..........................................

5) 01.10.2000 அன்று 20 வயதினை பூர்த்தி செய்யும் பெயர் யாது?
..........................................

6) உயரத்தின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் இறுதியாக நிற்பவர் யார்?
..........................................

7) 1.10.1993 அன்று குமாரின் வயது யாது?
..........................................

8) சம அளவான நிறையில் உள்ள மாணவர்கள் யாவர்?
..........................................

9) இங்குள்ள மாணவர்களில் மிகவும் உயரம் குறைந்த மாணவர் யார்?
..........................................

18. அன்று இரவு இடியுடன் கூடிய நல்ல மழை பெய்தது. நான் அப்போது புத்தகம் ஒன்றினை வாசித்துக் கொண்டிருந்தேன். வீட்டுக்கு வெளியே திடீரென கீச்.. கீச்.. என்ற சத்தம் கேட்டது...

இச் சம்பவத்தின் மிகுதிப் பகுதியை நிறைவு செய்வதற்கு பொருத்தமான ஆறு வாக்கியங்களை எழுதுக.

ஒவ்வொரு வாக்கியத்திலும் 4 சொற்களாவது இடம் பெறுதல் வேண்டும். சரியான எழுவாய், பயனிலையுடன் வாக்கியங்கள் எழுதப்பட வேண்டும்.

## மாதிரி வினாத்தாள் 4
## வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) 1 | 2) 2 | 3) 1 | 4) 3 | 5) 2 | 6) 2 | 7) 3 | 8) 2 |
| 9) 3 | 10) 2 | 11) 1 | 12) 2 | 13) 2 | 14) 3 | 15) 2 | 16) 3 |
| 17) 2 | 18) 2 | 19) 1 | 20) | 21) 2 | 22) 2 | 23) 1 | |
| 24) 3 | 25) 2 | 26) 3 | 27) 2 | 28) 3 | 29) 3 | 30) 3 | |
| 31) 2 | 32) 2 | 33) 2 | 34) 3 | 35) 3 | 36) 1 | 37) 1 | |
| 38) 2 | 39) 2 | 40) 3 | | | | | |


# தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களே !

**உங்கள் வலம்புரியில் கொழும்பின் பிரபல ஆசிரியர்கள் தயாரித்து வழங்கும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை 2009 இற்கான மாதிரி வினாத்தாள்கள் எதிர்வரும் வாரங்களில் வெளிவரும்.**

# சீன எல்லையை அண்மித்த பகுதிகளில் விமானத்தளங்கள் அமைக்கும் முயற்சியில் இந்தியா

இந்தியா - சீனா இடையே 1962 ஆம் ஆண்டு போர் நடந்தது. அதில் இந்திய படைக்கு சீனா பலத்த சேதத்தை உண்டாக்கியது. அதன் பிறகு இந்தியாவுடன் இணைந்த பகுதியான சிக்கிம் மாநிலத்துக்கு சீனா சொந்தம் கொண்டாடி வந்தது.

2003 ஆம் ஆண்டு அதை கைவிட்டு விட்டு அருணாசலப் பிரதேசத்துக்கு சொந்தம் கொண்டாடியது. அருணாசலப் பிரதேசத்தின் 90 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு (ஏறத்தாழ அருணாசலப் பிரதேசம் முழுவதும்) தங்களுக்கு சொந்தமானது என்று சீனா கூறி வருகிறது.

அருணாசலப் பிரதேசத்துக்கும் சீனாவுக்கும் இடையே ஆயிரத்து 30 கி.மீ தூரம் பொதுவான எல்லை இருக்கிறது.

வெள்ளையர் ஆட்சி காலத்தில் அங்கு 'மக் மோகன் லைன்' என்ற கற்பனையான எல்லைக் கட்டுப்பாட்டு கோடு வரையப்பட்டது. ஆனால், அதை எல்லையாக சீனா ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த (2008) ஆண்டு மட்டும் 270 முறை இந்திய பகுதிக்குள் சீன இராணுவம் அத்து மீறி புகுந்து உள்ளது. இந்த ஆண்டு இதுவரை 60 முறை அத்து மீறல்கள் நடந்து இருக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக அருணாசலப் பிரதேசத்தில் சீன இராணுவம் அடிக்கடி புகுந்து உள்ளது. இப்போது அருணாசலப் பிரதேசம் எங்களுக்கே சொந்தம் என்று சீனா அழுத்தமாக கூறி வருகிறது.

இதனால் சீனா எந்த நேரமும் அருணாசலப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கலாம் என்ற சந்தேகம் இந்தியாவுக்கு ஏற்பட்டு விட்டது.

அதைத் தொடர்ந்து முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அருணாசலப் பிரதேசம் அருகில் உள்ள அசாம் மாநிலத்தின் தேஷ்பூரில் உள்ள விமானப்படை தளத்தில் 18 போர் விமானங்களை நிறுத்தும் முயற்சியில் விமானப் படை ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கட்டமாக 4 சுகோய் - 30 எம்.கே.ஐ. ரக போர் விமானங்கள் அங்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பிறகு மேலும் 14 சுகோய் -30 எம்.கே.ஐ போர் விமானங்கள் அனுப்பப்பட்டு அங்கு ஒரு ஸ்குவாட்ரன் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்படும்.

இந்திய - ரஷ்ய கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட இந்த விமானங்கள் இந்திய விமானப் படையில் சக்தி வாய்ந்தவையாக கருதப்படுகின்றன. இவை அணு குண்டுகளை சுமந்து செல்லக் கூடியவை.

தேஷ்பூரில் இருந்து தாக்குதல் தூரத்தில் தான் சீன எல்லை இருக்கிறது. சீன எல்லையை ஒட்டி மேலும் பல விமானத் தளங்களை அமைக்கவும் விமானப் படை முடிபு செய்திருக்கிறது. இந்தத் தகவலை விமானப் படை செய்தி தொடர்பாளர் கர்னல் ஆர். கலியா தெரிவித்தார்.

இந்தியாவின் ஆயத்த நிலையை பார்க்கும் போது சீனாவுடன் மோதல் வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஓ-6)

## மணமேடையில் பலியான 70 வயது மாப்பிள்ளை!

கேரள மாநிலம் திருநாவாய் என்ற இடத்தைச் சேர்ந்தவர் குஞ்சுமுகம்மது (70). இவரது முதல் மனைவி இறந்து விட்டார். இதையடுத்து தன்னை கவனித்துக் கொள்ள ஒரு துணை வேண்டும் என்பதற்காக இரண்டாவது திருமணம் செய்து கொள்ள முடிபு செய்தார்.

பல இடங்களில் பெண் தேடிய இந்த 70 வயதுக்காரருக்கு பெண் கொடுக்கவும் ஒரு குடும்பம் தயாராக இருந்தது. அவர்கள் வீட்டில் இருந்த பெண்ணுக்கு 40 வயது. அந்த பெண்ணை குஞ்சுமுகம்மதுவுக்கு திருமணம் முடிக்க சம்மதித்தனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் திருமணம் நடத்த முடிபு செய்து ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தது. குஞ்சுமுகம்மது அலங்காரம் செய்து கொண்டு மண மேடைக்கு ஏறினார்.

பெண்ணின் வருகைக்காக காத்திருந்த அவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. மண மேடையிலேயே அவர் சுருண்டு விழுந்து பலியானார். (ஓ-6)

# கனடாவிலும் இந்தியர்கள் மீது இனவெறி தாக்குதல்

அவுஸ்திரேலியா நாட்டில் வாழும் இந்தியர்கள் மீது கடந்த சில தினங்களாக இன வெறித்தாக்குதல் நடந்து வருகிறது. இந்த நிலையில் கனடா நாட்டிலும் இந்தியர்கள் மீது இன வெறித்தாக்குதல் நடந்துள்ளது.

கனடா நாட்டில் அப்பாட்ஸ்போர்டு எனும் நகரில் சுமார் 1 இலட்சம் இந்தியர்கள் வசிக்கிறார்கள்.

அந்த நகரின் மக்கள் தொகையில் 25 சதவீதம் பேர் இந்தியர்கள் தான் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

நேற்று முன்தினம் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த 6 சீக்கியர்கள் வான்கோவர் புறநகர் பகுதியில் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது கனடாவை சேர்ந்த 4 பேர் அங்கு வந்தனர்.

டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்த இந்தியர்களை அவர்களை திட்டினார்கள். டென்னிஸ் விளையாடாமல் தடுத்து தகராறு செய்தனர். டென்னிஸ் பொருட்களை அள்ளி வீசினார்கள்.

இந்தச் சம்பவத்தில் இந்தியர்களுக்கு காயம் ஏற்பட்டது. இதுபற்றி இந்தியர்கள் பொலிஸில் புகார் செய்தனர். அதன் பேரில் 4 வெள்ளைக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். (ஓ-6)

## உலக தரிசனம்

# இரும்பைப் போல் உறுதியாக இருக்கும் டாரண்டுலா சிலந்தியின் வலை

## ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு



டாரண்டுலா என்கிற ஒரு வகையான சிலந்தியின் வலை, இரும்பை போல உறுதியாக இருக்கும் என்பது தான் சமீபத்திய ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு.

அதாவது இந்த டாரண்டுலா ரக சிலந்திகள் உருவாக்கும் வலைப்பின்னலின் இழைகள் இரும்பு போல் வலிமை வாய்ந்தவையாக இருப்பதுடன், இவை எடை குறைந்தும், நெகிழ்வுத் தன்மை மிக்கதாகவும் இருப்பதால் எதிர்காலத்தில் மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பதற்கு இந்த சிலந்தியின் வலைப்பின்னல் இழைகள் பயன்படக்கூடும் என்பது இதனை ஆராயும் ஆய்வாளர்களின் எதிர்பார்ப்பு.

இந்த எதிர்பார்ப்புடன் இங்கிலாந்தில் இருக்கும் ஆய்வாளர்கள் இந்த சிலந்தி வலை இழைகளின் அடிப்படை கட்டமைப்பை ஆராய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

டாரண்டுலா சிலந்திகள் எப்படி இந்த வலை இழைகளை உருவாக்குகின்றன என்பதை கண்டறிந்து அதன் மூலம் அந்த இழைகளை செயற்கையாக உருவாக்க முடியுமா என்றும் அவர்கள் ஆராய்கிறார்கள்.

இந்த வலை இழைகளைப் பயன்படுத்தி மருத்துவ அறுவை சிகிச்சைகளில் தையல் போடுவதற்கு பயன்படுத்தப்படும் இழைகள் உள்ளிட்ட பல மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆனால் அதை செய்ய வேண்டுமானால் ஏராளமான டாரண்டுலா சிலந்தி வலைகள் தேவைப்படும். அப்படி அதிகமான டாரண்டுலா சிலந்தி வலைகளை ஒரே இடத்தில் சேகரிப்பது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை.

பட்டுப் பூச்சிகளைப் போல இந்த டாரண்டுலா சிலந்திகள் ஒரே இடத்தில் குழுவாக வாழ்வதில்லை. நெருங்கி இருக்க அனுமதித்தால் ஒரு டாரண்டுலா சிலந்தியை மற்ற சிலந்தி சாப்பிட்டுவிடும் என்பதால் இந்த டாரண்டுலா சிலந்திகளை பட்டுப்பூச்சிகள் போல பண்ணைகள் மூலம் வளர்ப்பது என்பது நடைமுறை சாத்தியமில்லாத ஒன்று.

இந்தப் பின்னணியில் இந்த டாரண்டுலா சிலந்தியின் வலை இழைகள் எப்படி உருவாகின்றன என்பதை கண்டுபிடித்து அதை செயற்கையாக உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. (ஓ-6)

# பிரான்ஸ் விமான விபத்தில் பலியான 41 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன

(பாரிஸ்)

பிரான்ஸ் விமானம் அட்லாண்டிக் கடலில் விழுந்து 228 பேர் பலியானார்கள். விமானம் விழுந்த இடத்தில் ஒரு வாரத்தின் பின்னர் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் 13 உடல்கள் மீட்கப்பட்டன. இத்துடன் சேர்த்து 41 உடல்கள் இது வரை மீட்கப்பட்டுள்ளன.



இந்த உடல்கள் அனைத்தும் பிரேசில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு உள்ளன. அவைகளை அடையாளம் கண்டு பிடிக்கும் பணி நடந்து வருகிறது.

விமானம் விபத்துக்குள்ளானதற்கு வேக கட்டுப்பாட்டு கருவி கோளாறு தான் காரணம் என்று கூறப்படுகிறது. இந்த கருவியில் பனி படர்ந்ததால் விமானி வேகத்தை சரியாக கணிக்க முடியாமல் விபத்து நடந்து இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எனவே பிரான்ஸ் விமானங்களில் உள்ள பழைய வேககட்டுப் பாட்டு கருவிகள் அனைத்தையும் மாற்றி வருகின்றனர்.

இன்னும் பல விமானங்களில் கருவி மாற்றப்படவில்லை. எனவே அந்த விமானங்களை ஓட்ட மாட்டோம் என்று விமானிகள் கூறி விட்டனர்.

இதனால் 12 சதவீத விமானங்கள் வேலைக்கு செல்லவில்லை. இதனால் கருவிகளை அவசர அவசரமாக மாற்றி வருகிறார்கள். (ஓ-6)

# தலிபான்களுடன் நேருக்கு நேர் மோதி அவர்களை தோற்கடியுங்கள்

## பாக்.இராணுவத்துக்கு அமெரிக்க இராணுவம் அறிவுரை

(வோஷிங்டன்)

தலிபான்களுடன் நேருக்கு நேர் மோதுங்கள், அவர்களை தோற்கடியுங்கள் என்று பாகிஸ்தான் இராணுவத்துக்கு அமெரிக்க இராணுவம் அறிவுரை கூறி உள்ளது.

பாகிஸ்தானில் ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நடவடிக்கையில் இராணுவத்துக்கு முழு வெற்றி கிடைத்து உள்ளது.

இதை அடுத்து இராணுவம் வசீரிஸ்தானில் இராணுவ நடவடிக்கை தொடர இருக்கிறது. இந்த நிலையில் அமெரிக்க இராணுவ செய்தி தொடர்பாளர் ஜியாப் மோரீஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது நிருபர்கள் அடுத்ததாக தெற்கு வசிரீஸ்தான் பகுதிக்கு சென்று தாக்குதல் நடத்தும்படி பாகிஸ்தானை அமெரிக்கா கேட்டுக் கொள்ளுமா என்று கேட்டார்கள். இதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது,

பாகிஸ்தான் சுதந்திரமான நாடு. தற் பாதுகாப்புக்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அது தானாகவே எடுக்கிறது. யாரும் அதைச் செய், இதைச் செய் என்று அந்த நாட்டுக்கு உத்தரவு போட முடியாது.

தலிபான்களும், 'அதன் சார்பு அமைப்புகளும் இஸ்லாமாபாத் நகர் மீது ஆக்கிரமிப்பு செய்யத் தொடங்கியது முதல் அதை முறியடிப்பதற்காக ஆக்ரோஷமான உறுதியான இராணுவ நடவடிக்கைகளை பாகிஸ்தான் எடுத்து வருவதை நாங்கள் பார்க்கிறோம். இது எங்களை உற்சாகப்படுத்துகிறது.

அவர்கள் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இந்த நடவடிக்கைகளில் ஒரு போதும் தொய்வு ஏற்படாது என்பதையும் அவர்கள் தெரியப்படுத்தி இருக்கிறார்கள்.

தலிபான்களை ஒடுக்குவதற்கு அவர்களுடன் இராணுவம் நேருக்கு நேர் மோத வேண்டும். அவர்களை தோற்கடிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவத்துக்கு அறிவுரை கூறி இருக்கிறோம்.

இவ்வாறு இராணுவ செய்தி தொடர்பாளர் ஜியாப் மோரீஸ் தெரிவித்தார். (ஓ-6)

# சூ-கீயை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

## மியன்மார் நாட்டுக்கு அமெரிக்கா கோரிக்கை



(வோஷிங்டன்)

மியன்மார் நாட்டில் ஜனநாயக ஆட்சி கோரி போராடி வருபவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சூ-கீ வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார்.

அவர் வீட்டுக்காவல் விதிமுறைகளை மீறி அமெரிக்க நிருபரைச் சந்திப்பதற்காக வீட்டுக் காவலை மீறி வெளியே சென்றதாகக் கூறி அவர் மீது கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற அவர் மீது வழக்கு தொடர்ந்தது அநீதியானது என்று அமெரிக்காவும், இந்தோனேஷியாவும் கூறி உள்ளன. அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ஹிலாரி கூறுகையில்,

சூ-கீ மீது கூறப்பட்ட குற்றச் சாட்டுக்கள் ஆதாரம் இல்லாதவை என்றும் சூ-கீயை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். அவரை சந்திப்பதற்காக அமெரிக்கா வந்த இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி நூர் ஹாசன் விராஜுதாவும் சூ -கீயை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (ஓ-6)

# ஹிட்லர் படுகொலையைக் கண்டித்த உலகம் ஈழத்தமிழர் படுகொலையை வேடிக்கை பார்த்தது

## மக்களவையில் தி.மு.க. உறுப்பினர் உரை

(சென்னை)


இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என மக்களவையில் தி.மு.க உறுப்பினர் டி.கே.எஸ் இளங்கோவன் குறிப்பிட்டார்.

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று திங்கட்கிழமை அவர் பேசியதாவது,

1940 இல் ஜெர்மனியில் ஹிட்லரால் இலட்சக்கணக்கான யூத மக்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கொடுமையை உலக நாடுகள் அனைத்தும் கண்டித்தன. இறுதியாக ஹிட்லர் தற்கொலை செய்து கொள்ள நேரிட்டது.

இப்போது இலங்கைத் தீவில் போர் நடைபெறாத பகுதியில் இருந்த ஆயிரக்கணக்கான அப்பாவி தமிழர்கள் இலைங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டனர். 60 ஆண்டுகளுக்கு முன்னர் யூதர்கள் படுகொலையை உலகமே கண்டித்தது. ஆனால் இப்போது இலங்கைத் தமிழர்கள் படுகொலையை உலகம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

குறிப்பாக மிக நெருங்கிய அண்டை நாடான இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காண்பதாக பெருமைப்படுகின்ற நாம் பல்வேறு மதங்களுக்கும் மொழிகளுக்கும் சம உரிமை வழங்கியிருப்பதாக தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும் நாம் தமிழர்கள் கொல்லப்படுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.



அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கத் தவறிவிட்டோம். இப்போதாவது இலங்கைத் தமிழர்களுக்கு உதவ இந்திய அரசு முன்வர வேண்டும். போரினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து பொருட்களை இழந்து நோய்வாய்ப்பட்டு உடல் ஊனமுற்று தவிக்கும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்க தம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றார். (ஓ-6)

# போர் ஓய்ந்தாலும் தமிழர் துயரம் தீரவில்லை

## கனிமொழி தெரிவிப்பு



இலங்கையில் போர் ஓய்ந்தும் கூட அங்குள்ள தமிழர்களின் கஷ்டங்கள் தீர இன்னும் விடிவு பிறக்கவில்லை. எனவே அங்கு நிலையான தீர்வு ஏற்பட இந்தியா உதவ வேண்டும்.

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்ற உறுப்பினர் க. கனிமொழி பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களை தத்தமது பரம்பரை வீடுகளில் வாழ வைப்பதற்கு நிலையான அரசியல் தீர்வு காண்பதில் மத்திய அரசுக்கு பெரும் பொறுப்பு உள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,


இலங்கை தமிழர்களின் பாடுகள் பற்றி உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இலங்கையில் போர் முடிந்து விட்டது. மக்களின் கஷ்டங்கள் தீரவில்லை. ஏனெனில் அங்கு தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கும் மேலாக வாழும் தமிழ் மக்களுக்கு வாழும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. அவர்களை சம குடிம்க்களாக கருதும் உரிமை மறுக்கப்படுகிறது.

எனவே இலங்கையில் தற்போது போர் முடிந்துள்ள நிலையில் இந்திய அரசுக்கும் பெரும் பங்கு உண்டு. அந்த மக்களை தங்கள் இல்லங்களில் குடியமர்த்த செய்வது, பரம்பரை வீடுகளில் வாழ வைப்பது, நிலையான அரசியல் தீர்வு காண்பதில் மத்திய அரசுக்கு பெரும் பொறுப்புள்ளது என்றும் அவர் கூறினார். (ஓ-6)

# இ-மெயில் செய்தியால் ஏமாந்த இன்ஜினியர்

## 5 கோடியை எதிர்பார்த்து 4 இலட்சத்தை இழந்தார்



(புதுச்சேரி)

ஒரு மில்லியன் டொலர் பரிசு விழுந்துள்ளதாக வந்த இ-மெயிலைப் பார்த்து புதுச்சேரி இன்ஜினியர் நான்கு இலட்சம் ரூபாவை இழந்தார். மோசடி செய்த ஆபிரிக்க வாலிபரை, டில்லி பொலிசாரின் உதவியுடன் புதுச்சேரி பொலிஸார் கைது செய்தனர்.

புதுச்சேரி உருளையன் பேட்டையைச் சேர்ந்தவர் பிரபு (24). இன்ஜினியராக கடமையாற்றுகிறார். கடந்த ஆறு மாதங்களுக்கு முன் மேற்கு ஆபிரிக்க நாடான மாலியைச் சேர்ந்த கொண்டே சாண்டியாகோ (45) என்பவர் பிரபுவுக்கு இ-மெயில் அனுப்பினார். அந்த மெயிலில், இ-மெயில் உறுப்பினர்களுக்கான அதிஷ்டக் குலுக்கலில் பிரபுவுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் (ஐந்து கோடி ரூபாய்) பரிசாக விழுந்துள்ளது எனத் தெரிவித்திருந்தார். இதை நம்பிய பிரபு தனது வங்கிக் கணக்கு, முகவரி, மொபைல் எண் உள்ளிட்டத் தகவல்களை சாண்டியா கோவுக்குத் தெரிவித்தார்.

இதையடுத்து, பரிசு விழுந்ததற்கான சான்றிதழ் உள்ளிட்டவற்றை பிரபுவுக்கு சாண்டியாகோ அனுப்பினார். ஆறு மாதத்திற்குள் பிரபுவிடமிருந்து பல தவணைகளில் நான்கு லட்சம் ரூபாய் வரை பணம் பெற்றுக் கொண்ட சாண்டியாகோ, பரிசுப் பணம் கொண்டு வருகிறேன் என உறுதியளித்தார். பின் பணத்தை முழுவதுமாக டொலராக கொண்டு வர முடியாது. சுங்க அதிகாரிகளை ஏமாற்றிக் கொண்டு வர அமெரிக்க டொலர் நோட்டுகள் மீது கறுப்பு மை தடவி கொண்டு வருவேன். இதை மீண்டும் டொலராக மாற்ற அதன் மீது ஒரு திரவத்தை ஊற்ற வேண்டும் எனக் கூறினார்.

கடந்த வாரம் புதுச்சேரிக்கு வந்த சாண்டியாகோ பிரபுவைச் சந்தித்து ஒரு சிறிய லாக்கரை கையில் கொடுத்தார். அந்த லாக்கருக்குள் அமெரிக்க கொடியுடன் யு.எஸ். ரிசர்வ் பாங்க் என பிரிண்ட் செய்யப்பட்ட 40 கறுப்புக் காகிதக் கட்டுக்கள் இருந்தன.

ஒன்றைப் பிரித்துக் காட்டிய சாண்டியாகோ தான் கொண்டு வந்த திரவத்தை கறுப்பு காகிதத்தின் மீது ஊற்றினார். அவை அமெரிக்க டொலர்களாக மாறின. பின் கொண்டுவரும் போது திரவம் கொட்டி விட்டதாகவும் மும்பை சென்று அனுப்புகிறேன் எனக் கூறிச் சென்று விட்டார். பிரபு இரண்டு நாட்கள் காத்திருந்தார். சாண்டியாகோவைத் தொடர்பு கொள்ள முடியாததால் அதிர்ச்சி அடைந்த பிரபு, சீனியர் எஸ்.பி., ஸ்ரீகாந்திடம் புகார் அளித்தார்.

புதுச்சேரி பொலிஸார் கொடுத்த தகவலின் படி, டில்லி பொலிஸார் கடந்த திங்கட்கிழமை டில்லி விமான நிலையத்தில் சாண்டியா கோவைக் கைது செய்தனர். டில்லி பொலிஸார் மேற்கண்ட விசாரணையில்,

இவரைப் போன்ற பலர் ஆயிரம் கோடி ரூபாய் அளவில் மோசடியில் இறங்கி இருப்பது தெரிய வந்தது. சாண்டியாகோ பொலிஸ் பிடியில் இருப்பது தெரியாமல் நைஜீரியாவைச் சோந்த காஸ்மாஸ் மடுக்கே என்பவர் இதே பாணியில் பலரைத் தொடர்பு கொண்டு வருகிறார். அவரைப் பொறி வைத்துப் பிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கடந்த ஆண்டு இதே போல ஏமாந்த ஒருவர் கறுப்புக் காகிதக் கட்டுக்களை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டுச் சென்றது குறிப்பிடத் தக்கது. (ஓ-6)

# சரக்கு விமானம் விழுந்து நொறுங்கியதில் விமானப்படையினர் 14 பேர் பலி

(ஷில்லாங்)

இந்திய விமானப் படைக்கு சொந்தமான சரக்கு விமானம் ஒன்று அருணாச்சல பிரதேச மலைப்பகுதிகளில் விழுந்து நொறுங்கியது.



இதில் விமானப் படையைச் சோந்த எட்டு பேர் உட்பட 14 பேர் பலியாகி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்திய விமாணப் படைக்கு சொந்தமான ஏஎன்- 32 ரக சரக்கு விமானம் அசாமின் திப்ருகார்க்கில் இருந்து அருணாச்சல பிரதேசத்தின் மெச்சுகாவிற்கு நேற்று முன்தினம் சென்றது.

பின்னர் அங்கிருந்து மதியம் 2.00 மணி அளவில் இராணுவத்தினர் அல்லாத சிலரை ஏற்றிக் கொண்டு ஜோர்காட் என்ற இடத்திற்கு புறப்பட்டது. அதன்பின் அந்த விமானத்தை காணவில்லை. அருணாச்சல பிரதேச மலைப் பகுதிகளில் விமானம் விழுந்து நொறுங்கியிருக்கலாம் என விமரனப் படை தகவல் தொடர்பாளர் கூறியுள்ளார்.

விமானப்படையின் எட்டு பேர் உட்பட விமானத்தில் இருந்த 14 பேர் பலியாகி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

நொறுங்கி விழுந்த விமானத்தைக் கண்டு பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# இலங்கை பிரச்சினையில் கருணாநிதி பேசியது என்ன?

## வெள்ளை அறிக்கை கேட்கிறார் ராமதாஸ்



(சேலம்)

மூன்று ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் தமிழக முதல்வர் கருணாநிதி, இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு அதிகாரிகளுடன் பேசியது என்ன என்பதை வெள்ளை அறிக்கையாக வெளியிடமுடியுமா? என பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் பா.ம.கவுக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து சேலம் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள வந்துள்ள அக்கட்சி நிறுவுனர் ராமதாஸ் நிருபர்களிடம் கூறுகையில்,

இலங்கையில் ஒரே நாளில் 20 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதற்கு ஐ.நா.அமைப்பு உட்பட உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்து இருப்பதற்கு,தமிழக முதல்வர் என்ன பதில் சொல்லப்போகிறார்? எம். கே.நாராயணன், சிவ்சங்கர்மேனன் ஆகியோர் மூன்று ஆண்டுளில் பலமுறை தமிழக முதல்வரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

மத்திய அரசு அதிகாரிகளுடன் முதல்வர் நடத்திய பரிவர்த்தனை என்ன என, இது சம்பந்தமாக வெள்ளை அறிக்கை வழங்க முடியுமா? இவ்வாறு ராமதாஸ் கூறினார். (ஓ-6)

# புலிகளின் கட்டுப்பாட்டில் வசித்தவர்களிடம் இலங்கை இராணுவம் கடும் விசாரணை

## இலங்கை அகதி



(இராமேஸ்வரம்)

புலிகள் கட்டுப்பாட்டில் வசித்தவர்களை இராணுவம் துன்புறுத்துகிறது என இலங்கை அகதி ஒருவர் தெரிவித்தார். இலங்கை வவுனியாவைச் சேர்ந்த விஜயன் (35), இவரது மனைவி சாந்தி (32) இருவரும் கடந்த திங்கட்கிழமை இரவில் பேசாலை கடற்கரையிலிருந்து இலங்கை மீனவர் படகில் புறப்பட்டு இராமேஸ்வரம் வந்தனர். நடுவழியில் இருவரையும் படகோட்டிகள் மீன் பிடித்து திரும்பிய இராமேஸ்வரம் மீனவர் ஒருவரின் படகில் ஏற்றி அனுப்பினர்.

நேற்று முன்தினம் அதிகாலையில் இராமேஸ்வரம் துறைமுக கடற்கரையில் இறங்கிய இருவரையும் கோயில் பொலிஸார் விசாரித்து மண்டபம் முகாம் அனுப்பி வைத்தனர். அகதி விஜயன் கூறுகையில்,

கடந்த 2005 இல் வவுனியா ஆஸ்பத்திரி அருகில் இலங்கை இராணுவம் வீசிய குண்டு வீச்சில் எங்கள் இருவரது உடலிலும் குண்டு சிதறல்கள் ஏற்பட்டன. இதில் எனது மனைவிக்கு கண்பார்வை போய்விட்டது.

புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதியில் வசித்தவர்களை இலங்கை இராணுவத்தினர் அழைத்துச் சென்று கடுமையாக விசாரணை செய்கின்றர்.

நாங்கள் இருவரும் இலங்கை இராணுவத்துக்குப் பயந்து இங்கு வந்து விட்டோம். இலங்கை படகோட்டிகளிடம் படகு கட்டணமாக ஒரு லட்சம் பணம் கொடுத்தோம். நடுவழியில், இராமேஸ்வரம் மீனவர் படகில் ஏறி வந்ததால் மீனவர்களுக்கும் அதிகளவில் பணம் கொடுத்தோம் என்றனர். அகதிகளை ஏற்றி வந்த படகு குறித்து புலனாய்வு துறையினர் விசாரித்து வருகின்றனர். (ஓ-6)

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும். உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும்.
– புல்வெர்

# செய்த பாவத்திற்கு இந்தியா பிராயச்சித்தம் தேடுமா?

இலங்கையில் இனப் போராட்டம் கடந்த முப்பது வருடங்களாக நீடித்த நிலையில் இப்போது இருபது நாடுகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டதாக வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளை வெல்வதற்கு இருபது நாடுகளின் பலம் தேவைப்பட்டுள்ளது என்ற உண்மையை வெளிவிவகார அமைச்சர் கூறியதிலிருந்து விடுதலைப் புலிகளுடன் நடந்த யுத்தம் எத்தன்மையது; அதில் எத்தகைய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன; எந்தெந்த நாடுகள் ஆயுதங்களை வழங்கின என்ற உண்மைகளை கண்டறிவது சுலபமாகும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் இருபது நாடுகள் உதவி புரிந்தன என்ற தகவலைப் பகுப்பாய்வு செய்து அந்த நாடுகளை பட்டியல் படுத்தினால் முதலிடத்தில் இந்தியா இருப்பதை கண்டறிய முடியும்.

இதிலிருந்து இந்தியாவின் தலைமையினாலேயே ஏனைய பத்தொன்பது நாடுகளும் உதவி புரிந்தன என்ற முடிபுக்கு வருவதில் எந்தத் தவறும் இருக்க நியாயமில்லை.

இந்தியாவின் கடற் கண்காணிப்பு–ஆயுத உதவி–இராணுவ ஆலோசனை என்பன பல் பரிமாணங்களில் இலங்கை அரசு முன்னெடுத்த போருக்கு உதவியது.

இப்போது போர் முடிந்து விட்டதாக கூறப்படுகிறது. போரில் இலங்கையரசு வெற்றி கொண்டதென்பது தீர்ப்பு.

யாரிடமிருந்து வெற்றிபெற்றனர். இலங்கை என்ற சிறிய நாட்டில் நீண்டகாலயுத்தம், எங்கும் பதற்றம் பெரும்பான்மை–சிறுபான்மை என்ற இனத்துவ வேறுபாடு, இவற்றின் ஒட்டு மொத்தமாக 'இனப்பிரச்சினை' என்ற பெயர் நிலைத்துவிட்ட சோகம்.

நிலைமை இதுவாக இருக்கும் போது நடந்த யுத்தத்தில் அரசு வெற்றிபெற்றது எனக் கூறப்படுகின்றது.

இங்கு வெற்றி என்பது ஒவ்வொரு வருடமும் நடைபெறும் போட்டியில் கிடைப்பதல்ல. இது துடுப்பாட்ட போட்டியும் அன்று. ஒரு நாட்டின் வெற்றி.

2009ஆம் ஆண்டில் கிடைத்த வெற்றி நிலைத்த–நீடித்த வெற்றியாக இருக்க வேண்டும். 2009 இல் வெற்றி 2015இல் மீண்டும் சிக்கல் என்ற நிலை இருந்தால் அதன் பொருள் இலங்கை அரசு நடத்திய யுத்தத்திற்கு உதவிய இருபது நாடுகளும் முட்டாள்தனமாக செயற்பட்டன என்பதாகவே அமையும்.

எனவே முட்டாள்தனமான செயலுக்கு இந்தியா தலைமை வகித்த தென்னும் அவப் பெயரை நீக்க இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வை இந்தியா எடுத்துக் கொடுக்க வேண்டும்.

அதுவே இலங்கைக்கு வெற்றியாக அமையும்.

# மரபுகளுக்குள் நவீனத்தை செலுத்தி வாழ்ந்த முதல்வன் பேராசிரியர் துரைராஜா

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்களது 15 ஆவது சிரார்த்ததினம் இன்று.**

பேராசிரியரின் வாழ்வும் வரலாறும் எம் மத்தியில் தனித்து வமும் முதன்மையும் கொண்டது. மரபுகளுக்குள் நவீனத்தை செலுத்தி வாழ்ந்த முதல்வன் பேராசிரியர் துரைராஜா. உலகம் அறியப்பட்ட வியத்தகு கோட்பாட்டின் புலமையாளரான துரைராஜா இயல்பிலும், பண்பிலும், கடமையிலும் காத்திரமான மனிதனாக எம்மோடு வாழ்ந்தார். அவரை நான் வழி காட்டியாக, ஆசிரியராக, மதிப்புக்குரிய மனிதனாக காணும் வாய்ப்புக் கிடைத்தது. ஒவ்வொரு சந்திப்புக்களும் நினைவுகளிலிருந்து மாறாத உணர்வைத் தந்துள்ளது.

பேராசிரியரின் பணிமனையில் மாணவனாக இருந்த போது சந்திக்கும்வேளைகளில் ஆசிரியனாக மிளிருவார். மாணவ– துணை வேந்தர் முறுகல்கள் நிகழும்போது அவருடன் அடிக்கடி சந்திக்க வாய்ப்புக் கிடைக்கும். அப்போது நாம் சில திட்டமிடல்களுடனும் எதிர்வாதம் புரியும் உணர்வுடனும் பிரசன்னமாவது வழக்கம். ஆனால் துணைவேந்தர் ஆசனத்தில் ஓர் அரசன் இருப்பதுபோல் கம்பீரம் காணப்பட்டாலும் உபசரிப்பில், அதன் பேச்சு மொழியில் அதை உச்சரிக்கும் முறையில் எமது எதிர்வாதம் அனைத்தும் செத்துப் போய் விடும். நம்பிக்கையோடு உரையாடுவார். உணர்வுகளைக் கடந்து உண்மைகளைப் புரிய வைப்பார்.தர்க்கமாக உரையாடுவதைக் காட்டினாலும் அதற்குள் மறைந்துள்ள மெய்மைத் தன்மையை போதிப்பார். அதனால் அவரையும் அவரது நிர்வாகத்தையும் தாங்கும் சக்தியாக எம்மை மாற்றிவிடுவார். முடிவில் தீர்வுகளை தந்து எங்களை வழியனுப்புவார். நாம் ஒரு வகுப் பறை முடித்து வெளியே வருவதுபோல் உணர்வோம்.

ஒருதடவை அவரது வீட்டுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டது. பேராசிரியரின் தோற்றம் எனக்கு பிரமிப்பாக இருந்தது. அவரது வீட்டார் அவர் தோட்டத்தில் நிற்பதாகக் கூறினர். அவர் வெங்காயத்திற்கு தோட்ட மண்வெட்டியால் தண்ணீர் மாற்றிக் கொண்டிருந்தார்.இன்முகத்தோடு வாருங்கள் என அழைத்தார். நான் அதிர்ந்து போனேன். என்னை அழைத்துச் சென்றவர் பேராசிரியர் புஷ்பரட்ணம். அவர் என்னைப் பார்த்து நிலைமையைப் புரிந்துகொண்டு செயல்பட்டார். அவ்வளவுக்கு எளிமையான மனிதனாக துணை வேந்தரைக் கண்டபோது அவரின் வழிகாட்டல் எமக்கு ஊன்றுகோலானது. எதையும் இலகுவாகப் புரிந்துகொள்வார்.

அவர் அப்போது கூறினார் "எனது கோட்பாட்டுக்கு முதலீடு இந்த மண்ணும் அதன் மகிமையும் தான்" என்றார். அதனை புரட்டிப் புரட்டி கொத்தும் போது எழுந்ததே அப்புலமையாளனின் கோட்பாடு.

**கே.ரீ.கணேசலிங்கம்**
**தலைவர்,**
**சமூகவியல்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

அவ்வாறே அவரது வாழ்வின் பயணங்கள் முழுவதும் நல்ல மனிதனாக எங்களுடன் வாழ்ந்தார். எதற்கும் அவசரப்படாது, நிதானமாகப் பதிலளிக்கு வல்லமை அவருக்கே உரியது. ஒரு தடவை நேர்முகத் தேர்வில் அவர் என்னிடம் அரச நிர்வாகம் பற்றி கேள்வி கேட்டார். பதில்கூறிக்கொள்வதற்கு சில வினாடிகள் தவறிவிட்டேன். அவர் அதற்கு தானே பதிலளிக்க ஆரம்பித்தார். அதன் ஆரம்பத்தை எனக்கு சொல்லித்தந்தார்.அதன் பின்பு நான் வேகமாகப் பதிலளிக்க ஆரம்பித்துவிட்டேன். என்னைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப அவரது அணுகுமுறை உயர்ந்த மனோ நிலையைத் தந்தது.

பேராசிரியரின் நினைவு நிலையானது. அவரது வாழ்வு மரணித்த பின்பு எழுச்சி பெற்றது. அவரது வாழ்வின் வசந்தமான நினைவுகளை சுமந்தபடி இந்த மண்ணும் அவரது மாணவர்களும் செயல்படுவார்கள்.

# மீள் கட்டுமானப் பணிகளில் பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டாலும் அபிவிருத்தித் திட்டங்களின் உரிமை அரசிடமே இலங்கை மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளிடமோ அல்லது அமைப்புக்களிடமோ இலங்கை அரசாங்கம் பிச்சை எடுக்க வில்லை என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியிருக்கும் கடன் உதவி எந்த நேரத்திலும் கிடைக்கும் என குறிப்பிட்ட அவர் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியில் முதல் கட்டத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகக் கூறினார்.

இலங்கையில் புனரமைப்பு மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கு உதவி வழங்குவது தொடர்பாக நட்பு நாடுகளும் உலக வங்கி' மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எமது சொந்தக்காலில் நிற்பதற்கு எம்மால் முடியும். வடக்கில் புனரமைப்பை முன்னெடுப்பதற்கு தேவையான நிதியுதவிகள் கிடைத்துள்ளன. தற்பொழுது கிடைத்திருக்கும் நிதியுதவியைக் கொண்டு எமது பணிகளை முன்னெடுத்துச்செல்ல வேண்டும். சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் முழந்தாளிட்டு செல்ல வேண்டிய தேவை எமக்கில்லை. எனினும் எந்த விதமான சிக்கலையும் கொடுக்காமல் வழங்கப்படும் நிதியுதவிகளை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று குறிப்பிட்ட மத்திய வங்கியின் ஆளுநர்,

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெற்றுக் கொள்வதில் எந்தவிதமான ஆபத்தும் இல்லை. இது முற்று முழுதாக அரசியலுக்கு அப்பால்பட்ட நடவடிக்கை. சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடென்ற ரீதியில் அதனிடம் இருந்து கடன் உதவியைப் பெற்றுக்கொள்ள எமக்கு உரிமை உள்ளது என்றார். நாட்டில் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பல்வேறு வழிகளில் இருந்து பணம் கிடைக்கப் பெறுவதாகக் குறிப்பிட்ட கப்ரால் மீள் கட்டுமானப் பணிகளின் போது பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டாலும் அபிவிருத்தித் திட்டங்களின் உரிமை அரசாங்கத்திடமே இருக்கும் எனத் தெரிவித்தார்.

(ஓ–6)

# எல்லையற்ற கருணை வள்ளல் பகவான் பாபா

இளம் தம்பதியினருக்கு ஒரு சிறு வயதுப் பெண் பிள்ளை இருந்தாள் .அப் பிள்ளைக்கு இருதயக்கோளாறு இருந்தது. தாய் , தந்தையர் தமது பிள்ளையை கொண்டு செல்லாத மருத்துவமனை கிடையாது. இதய சிகிச்சை நிபுணர்கள் பலரிடம் காட்டினர். அவர்கள் இதயத்தில் 3 ஓட்டைகள் இருக்கின்றன. உடனடியாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என்று அழுத்தமாகச் சென்னார்கள்.அப் பிள்ளையும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். தமது பிள்ளையின் துன்பத்தை நினைத்து பெற்றோர் வருந்தினர். மறு நாள் காலை அத் தந்தையார் புட்டவர்த்தி நோக்கி எல்லாம் வல்ல சத்திய சாயி பகவானிடம் சென்றார்.

தரிசன மண்டபத்தில் அமர்ந்திருந்து பகவனை நினைத்து சாயிமாதா, சாயிமாதா என்று வருந்தி வதங்கிக்கொண்டிருந்தார். அப்போது கருணை மிகுந்த பகவான் அடியார்களின் மத்தியில் நடந்து வந்தார். அன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடும் சிறுவன் ஒருவன் இனிப்புகளைக்கொண்டுவந்து பகவானிடம் அவைகளை ஆசி பெற சமர்ப்பித்தான். பகவானும் அவ்வாறே அருளாசி வழங்கி அந்த இனிப்புக்களில் 3 கைபிடி எடுத்து உட்கார்ந்திருந்த அடியார்கள் மத்தியில் வீசி எறிந்தார். ஒரு இனிப்பு இதய நோயாளியின் தந்தையின் மடியில் போய் விழுந்தது. அவர் மட்டற்ற மகிழ்ச்சி பொங்க அப் புனிதப்பிரசாதத்தை எடுத்துக்கொண்டு மருத்துவமனையில் இருந்த தன்மகளிடம் சென்று உண்ணும் படி கொடுத்தார்.



சிறிது நேரம் கழித்து சத்திர சிகிச்சைக்காக கொண்டு செல்ல இருந்த அப்பிள்ளையை கடைசியாக "X-Ray" எடுப்பதற்காக கொண்டு சென்று X-Ray எடுத்தனர். அப்போது வைத்தியர்கள் பெரும் பீதியுடன் கூடிய அதிர்ச்சி அடைந்தனர். அவள் இதயத்தில் எவ்வித மான துளைகளும் காணப் படவில்லை. அப்பிள்ளை மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டாள். தாய், தந்தையர் இருவரும் மட்டற்ற மகிழ்ச் சியில் துள்ளிக் குதித் தனர். எல்லையற்ற கருணை வள்ளல் பகவான் பாபாவின் அருட் கருணையை நினைத்து நினைத்து வணங்கினர். இப்படி கோடிக்கணக்கான தூய அடியவர்கள் பகவானிடம் தஞ்சம் புகுந்து ஆனந்த [illegible]ளத்தை அள்ளிப்பருகுகின்றனர்.

ஜெய்[illegible]ராம் யாதவன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான

மஹோற்சவ விஞ்ஞாபனம் -2009



நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் வைகாசித் திங்கள் 30 ஆம் நாள் நாளை மறுதினம் (13.06.2009) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு துவஜாரோகணம்(கொடியேற்றம்) நடைபெறவுள்ளது.

வசந்தமண்டபப் பூஜை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

துவஜாரோகணம் (கொடியேற்றம்) 10.30 மணிக்கு நடைபெறும்.

நண்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வரபூசை(அன்னதானம்) இடம்பெறும்.

விசேட நிகழ்வாக ஈழத்து தலைசிறந்த நாதஸ்வர, தவில் வித்துவான்கள் இணைந்து மங்கள இசைமாரி பொழிய அம்பாளின் திருவருளுடன் மகா கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

அம்பாளின் அடியவர்கள் அனைவரும் அம்பாளின் கொடியேற்ற விழாவில் கலந்து அம்பாளின் இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கொடியேற்றத் திருவிழா உபயகாரர்கள்

(C/2567)


# இலங்கை இளைஞர் உட்பட இருவர் சென்னை விமான நிலையத்தில் கைது

(சென்னை)

ஆள்மாறாட்டம் செய்து லண்டனுக்கு பயணிக்கவிருந்த இலங்கை இளைஞர் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் சென்னை விமானநிலையத்தில் வைத்து இந்திய காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்ட னர்.

இவர்கள் லண்டனில் உள்ள வெதுப்பக மொன்றில் கடமைபுரிவதற்காகவே அங்கு செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மத்திய தொழிற் பாது காப்பு படையினர் தகவலறிந்து இருவரையும் விமான நிலைய காவல்துறையினரிடம் ஒப்ப டைத்தனர். (ஓ-4)

# குடும்பநல உத்தியோகத்தர் (மருத்துவ மாதர்) ஆட்சேர்ப்பு -2009

குடும்பநல உத்தியோகத்தர் (மருத்துவ மாதர்) ஆட்சேர்ப்பிற்கு பின்வரும் தகைமை யுள்ள விவாகமாகாத இலங்கைப் பெண் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களினை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை களிலும் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி *10.07.2009* ஆம் திகதி.

1. வயதெல்லை 18 வயது -40 வயது
2. உயரம் 4 அடி 10 அங்குலத்துக்கு குறையாதிருத்தல்
3. தகைமைகள்
   - வடமாகாணத்தில் எப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய சரீர சௌக்கியத்தைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
   - வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன் வதிவிடத்தை உறுதிப்படுத்த கடந்த 3 வருட வாக்காளர் இடாப்பு பிரித்தெடுப்பு அல்லது கிராம சேவை அலுவலரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கடிதம் விண்ணப்பத் துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.
4. கல்வித் தகைமைகள்
   - க.பொ.த.(சா/த) பரீட்சையில் தமிழ்மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்திகளுடன் ஒரு தடவையில் 5 பாடங்களுக்குக் குறையாதவாறு இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தபட்சம் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   - குறிப்பு க.பொ.த.(உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் ஏதாவது பிரிவில் சித்தியடைந்திருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.
5. பதவியின் தன்மை - நிரந்தரமானதும் ஓய்வூதிய/உரித்துடையதும்.

6. யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் மற்றும் யாழ்.மாவட்ட நலன்புரி முகாம்களில் உள்ள விண்ணப்பதாரிகள் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 10.07.2009 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு *பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பிவைக்கவும். நேரடியாகக் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் அருகிலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் பெற்றுக்கொள்ள லாம்.

7. விண்ணப்பங்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மாணவ குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சி 2009" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். உரியமுறையில் பூரணப்படுத்தப்படாததும் காலம் தாழ்த்திய விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதுடன் தபாலில் காணாமல் போன, தபால் சேவையில் காலதாமதம் போன்ற முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இலங்கை நிர்வாக சேவையில் / கல்விச் சேவையில் / அரசாங்க கணக்காளர் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர் ஒருவர், அரசாங்கப் பாடசாலை ஒன்றின் தலைவர் ஒருவர் (சமாதான நீதவான் ஒருவர், சட்டத்தரணி ஒருவர் அல்லது ரூபா 22,935 க்கு குறையாத வேதனம் பெறும் அரசாங்க அலுவலர் ஒருவர்) விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

ஒப்பம்
இ.இரவீந்திரன்
செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு வடமாகாணம்.

(C/2570)

# குடாநாட்டிற்கு பென்டோச் பற்றரி வகைகளை எடுத்து வருவதற்கு தொடர்ந்தும் அனுமதி மறுப்பு

## யாழ். வர்த்தகர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவிற்கு பென்டோச் பற்றரி வகை களை எடுத்து வருவதற்கு தொடர்ந்தும் அனுமதி மறுக்கப்பட்டு வருகின்றது.

இதனை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரப்பட்டுள்ள போதும் சாதகமான பதில் கிடைக்கவில்லையென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டில் ஏ-9 தரைப் பாதை மூடப்பட்ட பின்னர் பென்டோச் பற்றரி வகை கள் எடுத்து வருவதற்குத் தடை விதிக்கப்பட் டது.

இதனால் அரச திணைக்களங்கள் முதற்கொண்டு பொதுமக்கள் வரை பென் டோச் பற்றரியில் இயங்க வைக்கப்பட்டு சாதனங் களான சுவர் மணிக்கூடுகள், தொலைக்காட்சிப் பெட்டிக்கான தன்னியக்க கருவிகள் உள்ளிட்ட பொருட்கள் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இவற்றை எடுத்து வர பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் பலன் கிடைக்கவில்லை.

தற்போது மீண்டும் ஏ-9 பாதையூடாக யாழ்.குடாநாட்டிற்கான பொருட்கள் கொண்டு வரப்படுகின்றபோதும் பென்டோச் பற்றரிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக கவலை தெரி விக்கப்படுகின்றது. (ஓ-6)

# மீட்கப்பட்ட சகல பிரதேசங்களிலும் விரைவில் சிவில் நிர்வாகம்

## பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட சகல பிரதேசங்களிலும் வெகுவிரைவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக் கை எடுத்துள்ளது.

இதன் ஓர் அங்கமாக அப் பிரதேசங் களில் புதிதாக 21 பொலிஸ் நிலையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமட்ண தெரிவித்தார்.

இவற்றில் ஏழு பொலிஸ் நிலையங்கள் ஏற்கனவே மன்னார் பொலிஸ் பிரிவில் நிறு வப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மாங்குளம் ஆகிய மூன்று பொலிஸ் பிரிவுகளில் மேலும் 14 பொலிஸ் நிலையங் கள் நிறுவப்படவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண வின் தலைமையில் நேற்று முன்தினம் பொலிஸ் தலைமையகத்திலுள்ள விசேட செய்தியாளர் மாநாடு இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

மன்னார் பொலிஸ் பிரிவில் மடு, விடத்தல் தீவு இலுப்பக்கடவை, முழங்காவில், சிலாவத் துறை, பண்டிவிரிச்சான் ஆகிய பிரதேசங் களில் ஏழு பொலிஸ் நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் 653 வயோதிபர்களை விடுவிக்க உத்தரவு

## மேஜர் ஜெனரல் சந்திரசிறி நடவடிக்கை

(செட்டிகுளம்)

செட்டிக்குளம் பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 653 வயோதி பர்களை விடுவிப்பதற்கான உத்தரவை மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார்.

இதற்கான பட்டியல்கள் வவுனியா செயல கத்திலும் பிரதேச செயலகத்திலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வயோதிபர்களை விடுவிப்ப திலும் சிறிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வட பிராந்திய பொலிஸ் மா அதிபரின் அனுமதி யின் பின்னரே விடுவிக்கப்படுவார்களென வும் இதற்கென ஏழு பக்கங்களைக் கொண்ட படிவம் பூரணப்படுத்தப்படவேண்டுமென்ற முறையும் மாற்றப்பட்டுள்ளது.

செட்டிகுளம் மெனிக்பாமிலுள்ள அலு வலகத்தில் இராணுவ மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் அனுமதி பெற்ற பின்னரே உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்படு வார்கள்.

இதற்காக உறவினர்கள் தாம் வதியுமி டத்து கிராம அலுவலரின் உறுதியுரையுடனும் பிரதேச செயலாளரின் விதந்துரையுடன் அர சாங்கம் அதிபரூடாக மேஜர் ஜெனரலுக்கு கடிதம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். (ஓ-6)

# ஜெயசூர்யா-டில்சான் ஜோடி 'ரன்' மழை; இலங்கை அணி அசத்தல் வெற்றி

(நோட்டிங்காம்)

ஜெயசூர்யா-டில்சான் ஜோடியின் ஓட்டங்கள் குவிப்பின் மூலம் இலங்கை அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

ஐ.சி.சி. இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ண தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது.இதில் நேற்று நோட்டிங்காம் ரென்ற் பிறிட்ஜ் மைதானத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 11 ஆவது போட்டியில் பிரிவு சி யைச்சேர்ந்த இலங்கை- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் ஹயில் முதலில் களத்தடுப்பைத் தீர் மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணிக்கு டில்சான்-ஜெயசூர்யா ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. இதில் ஆரம்பம் முதலே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஜெயசூர்யா 29 பந்து களில் அரைச் சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடியின் அதிரடியான இணைப் பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 9.5 ஓவர் களில் 100 ஓட்டங்களை தொட்டது. இதில் சனத் ஜெயசூர்யா 47 பந்துகளில்(10 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 81 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்க இலங்கை அணி 12.3 ஓவர்களில் 124 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை யிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் சங்கக்கார 5 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து மஹேல ஜெயவர்த் தன களமிறங்க மறுமுனையில் திலகரட்ண டில்சான் தனது 35 ஆவது பந்தில் அரைச் சதத்தினை பூர்த்தி செய்தார்.

இந்நிலையில் இலங்கை அணி 15.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக் களையிழந்து 150 ஓட்டங்களைக் குவித்தது. இதில் மஹேல ஜெயவர்த்தன 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 17.2 ஓவர்களில் 168 ஓட்டங்களை எடுத்து



3 ஆவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து முபாரக் களமிறங்க மறுமுனையில் திலகரட்ண டில்சான் 47 பந்துகளில் (11 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக) 74 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சாமர சில்வா 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 192 ஓட்டங்களைக்குவித்தது.

இதில் முபாரக் 8,மத்யூஸ் 3 ஓட்டங்கள்ளையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.பந்து வீச்சில் சிம் மோன்ஸ் 3 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ரெய்லர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 193 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சிம்மோன்ஸ் - பிளச்சர் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

எனினும் பிளெச்சர் 13 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 3.2 ஓவர்களில் 38 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது. தொடர்ந்து மார்சல் களமிறங்க மறுமுனையில் சிம்மோன்ஸ் ஓட்டங்களைக் குவித்தார்.

எனினும் சிம்மோன்ஸ் 19 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 29 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மார்சல் 14 ஓட்டங்களுடனும் சந்தர்போல் ஒரு ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி 7.5 ஓவர்களில்73 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகளையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் 5 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சர்வான் - பிராவோ ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இதில் அதிரடியாக ஆடிய பிராவோ 38 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) '51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க மேற்கிந்தியத்தீவுகள் அணி 17.3 ஓவர்களில் 150 ஓட்டங்கள் எடுத்து 5 ஆவது விக்கெட்டையுமிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய போல்லாட் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய போது.மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளையிழந்து 177 ஓட்டங்களை எடுத்து 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி யடைந்தது.

இதில் சர்வான் 26 பந்துகளில் 28 ஓட்டங்களையும் போல்லாட் 11 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 19 ஓட்டங்க்ளையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்து வீச்சில் லசித்த மலிங்க , அஜந்த மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முரளிதரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுத்த ஜெயசூர்யா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி லீக் சுற்றில் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றது.

இதேவேளை மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஆரம்ப அதிரடி நாயகனும் அணித்தலைவருமான ஹயில் நேற்றைய போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட காயம் காரணமாக துடுப்பெடுத்தாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சுப்பர் – 8 அட்டவணை

"இருபது-20" உலகக் கோப்பை சுற்றுத் தொடரிலிருந்து பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, ஸ்கொட்லாந்து, நெதர்லாந்து ஆகிய அணிகள் வெளியேறின.

தற்போது இருக்கும் 8 அணிகள் "ஈ" மற்றும் "எப்" பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பிரிவு "ஈ"யில் இந்தியா(ஏ1) ,இங்கிலாந்து(பி2), மேற்கிந்தியத் தீவுகள்(சி1), தென்னாபிரிக்கா (டி2) அணிகள் இடம் பிடித்துள்ளன.

பிரிவு "எப்" இல் அயர்லாந்து (ஏ2) , பாகிஸ்தான் (பி1),இலங்கை (சி2) ,நியூசிலாந்து (டி1) அணிகள் இடம்பிடித்துள்ளன.

இதன்படி இன்று முதல் ஆரம்பமாகவிருக்கும் "இருபது-20" உலகக் கோப்பை "சுப்பர்-8" சுற்று போட்டிகளின் அட்டவணை வருமாறு.

| நாள் | பிரிவு | அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| ஜுன் 11 | எப் | நியூசிலாந்து-அயர்லாந்து | நோட்டிங்ஹாம் | மாலை 6 மணி |
| ஜுன் 11 | ஈ | இங்கிலாந்து-தென்னாபிரிக்கா | நோட்டிங்ஹாம் | இரவு 10 மணி |
| ஜுன் 12 | எப் | பாகிஸ்தான்-இலங்கை | லோர்ட்ஸ் | மாலை 6 மணி |
| ஜுன் 12 | ஈ | இந்தியா-மேற்கிந்தியத்தீவுகள் | லோர்ட்ஸ் | இரவு 10 மணி |
| ஜுன் 13 | ஈ | மேற்கிந்தியத்தீவுகள்-தென்னாபிரிக்கா | ஓவல் | மாலை 6 மணி |
| ஜுன் 13 | எப் | நியூசிலாந்து-பாகிஸ்தான் | ஓவல் | இரவு 10 மணி |
| ஜுன் 14 | எப் | அயர்லாந்து-இலங்கை | லோர்ட்ஸ் | மாலை 6 மணி |
| ஜுன் 14 | ஈ | இந்தியா-இங்கிலாந்து | லோர்ட்ஸ் | இரவு 10 மணி |
| ஜுன் 15 | ஈ | இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவுகள் | ஓவல் | மாலை 6 மணி |
| ஜுன் 15 | எப் | பாகிஸ்தான்-அயர்லாந்து | ஓவல் | இரவு 10 மணி |
| ஜுன் 16 | எப் | நியூசிலாந்து-இலங்கை | நோட்டிங்ஹாம் | மாலை 6 மணி |
| ஜுன் 16 | ஈ | இந்தியா-தென்னாபிரிக்கா | நோட்டிங்ஹாம் | இரவு 10 மணி |
| ஜுன் 18 | - | முதல் அரையிறுதி | நோட்டிங்ஹாம் | இரவு 10 மணி |
| ஜுன் 19 | - | 2வது அரையிறுதி | ஓவல் | இரவு 10 மணி |
| ஜுன் 21 | - | இறுதிப் போட்டி | லோர்ட்ஸ் | இரவு 10 மணி |

# தென்னாபிரிக்கா திரில் வெற்றி நியூசிலாந்து போராட்டம் வீண்

(லண்டன்)

வான் டேர் மேர்வின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் தென்னாபிரிக்க அணி ஒரு ஓட்டம் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை போராடி வெற்றி பெற்றது.

ஐ.சி.சி.இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற லீக் சுற்றின் 10-வது லீக் போட்டியில் பிரிவு டி யைச் சேர்ந்த நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இவ்விரு அணிகளும் ஏற்கனவே சுப்பர்-8க்குத் தகுதி பெற்ற நிலையில் இப் போட்டியில் வெற்றிக்காக களமிறங்கின. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களை எடுத்தது. இதில் அணித் தலைவர் சிமித் 35 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்



பட) 33 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 23 பந்துகளில் (2 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 24 ஓட்டங்களையும் டுமினி 23 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 29 ஓட்டங்களையும் டி. வில்லியர்ஸ் 15, அல்பி மோர்கல் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பட்லர் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக் களையும் மில்ஸ், நதன் மக்குலம் மற்றும் ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.பதிலுக்கு 20 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி இறுதிவரை போராடி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அணித் தலைவர் பிரண்டன் மக்குலம் 54 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 57 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓரம் 18 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களையும் ரெய்லர் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் வான்டேர் மேர்வ் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த வான் டேர் மேர்வ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# இங்கிலாந்து டென்னிஸ்; சானியா வெற்றி

(பேர்மிங்காம்)

பேர்மிங்காம் டென்னிஸ் போட்டியில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா முதல் சுற்றில் எளிதாக வெற்றி பெற்றார்.

இங்கிலாந்தின் பேர்மிங்காம் நகரில், ஏகான் கிளாசிக் சர்வதேச டென்னீஸ் தொடர் நடந்து வருகிறது.முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்த போட்டி விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் போட்டிக்கு சிறந்த பயிற்சியாகும்.போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.1 கோடியாகும்.

இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சாவும் இதில் கலந்து கொண்டுள்ளார்.

தரவரிசையில் 98 ஆவது இடம் வகிக்கும் அவர் நேற்று முன்தினம் தனது முதல் சுற்றில் 173 ஆம் நிலை வீராங்கனை பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த தாதியானா பவுட்செக்கை சந்தித்தார்.

இதில் அபாரமாக செயல்பட்ட சானியா மிர்சா 6:1, 6:2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் இந்த ஆட்டம் 1 மணி 22 நிமிடங்கள் நடந்தது.

# பாவனைக்குதவாத ஆயுதங்கள் இருந்த களஞ்சியசாலையே தீயில் அழிந்துள்ளது

## இராணுவப் பேச்சாளர் தகவல்


(கொழும்பு)

வவுனியா பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தில் 211 படைப்பிரிவின் முகாமில் பாவனைக்குதவாத 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பீரங்கித் தோட்டாக்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலையே தீயில் அழிவடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட இந்த வெடிப்பு காரணமாக பரவிய தீ 3 மணித்தியாலயங்கள் வரை நீடித்துள்ளது. இந்த வெடிப்புக்கான காரணம் சரியாக தெரியவரவில்லை எனவும் நாணயக்கார தெரிவித்தார். இதில் படையினருக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாவனைக்குதவாத பீரங்கிக் குண்டுகளை பரீட்சிக்க மேற்கொண்ட முயற்சியின் காரணமாகவே இந்த தீ ஏற்பட்டதாக உறுதிப்படுத்தாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை கடந்த 6 ஆம் திகதி யாழ்ப்பாணம் மயிலிட்டியில் உள்ள இராணுவ களஞ்சியசாலை ஒன்றிலும் தீ ஏற்பட்டது. இந்தக் களஞ்சியசாலையிலும் பாவனைக் குதவாத தோட்டாக்கள் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்ததாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ச-5)



## பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் கடமை நிறைவேற்று உதவிக்கல்விப் பணிப்பாளர்- உடற்கல்வி பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இப்பதவிக்கு தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, தரம் 2-I தகுதியுடைய ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி உடற்கல்வி பாடத்தில் பட்டதாரியாகவோ அல்லது பயிற்றப்பட்டவராகவோ இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை தீவகக் கல்வி வலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விண்ணப்ப முடிபுத் திகதி யூன் 20 எனவும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச)

## இலங்கை...

இரவு விமான நிலையத்தை வந்தடைந்த இவர், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாப்புத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முற்பகல் திருப்பி அனுப்பப்பட்டார் என்று குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பி.பீ.அபயகோன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்புகளைக் கொண்டிருந்தார் என புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலை அடுத்து அவர் பிரவேசிப்பது நாட்டுக்கு அச்சுறுத்தல் என கருதப்பட்டது. எனவே அவரை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். (ச-3,5,14)

## ராஜீவ் காந்தியின் கொலை...

கும் கருத்தானது சரியெனத் குறிப்பிட்டிருக்கும் மேனன், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதிலிருந்து இந்தியா புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து வந்ததாக கூறினார். ஏனெனில், இலங்கையின் பாதுகாப்பு இந்தியாவுடன் தொடர்பு பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தால் இந்தியா பாதுகாப்பான இடமாக இருக்கமுடியாது. பயங்கரவாதம் எப்போதும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கை பத்திரிகை ஆசிரியர்களிடம் கருத்துத் தெரிவித்த போது மேனன் சுட்டிக்காட்டினார்.

சிக்கலான முறைகள் குறித்து இந்தியாவும், இலங்கையும் நன்கு பாடம் கற்றுக் கொண்டுள்ளது. இந்தியாவின் அயல்நாடுகள் பொருளாதார ரீதியில் ஸ்திரமான நிலையில் இருக்க வேண்டுமென்பதால் இலங்கையின் பொருளாதார நிலையும் ஸ்திரமானதாக இருக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கைக்கான புனரமைப்பு நடவடிக்கைகளை இந்தியாவோ அல்லது நோர்வேயோ வழிநடத்தக்கூடாது எனவும், தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக புனரமைப்பு நடவடிக்கைகளை இலங்கையே முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இவற்றின் அடிப்படையிலேயே தான் திட்டமிட்டுச் செயல்பட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது என்னைக் கவர்ந்துள்ளது. இலங்கைக்கு எது பொருத்தம் என ஜனாதிபதி தீர்மானித்த விடயங்கள் அனைத்துக்கும் இந்தியா உதவியாகவிருந் தது என்றார் சிவ்சங்கர் மேனன்.

இதேவேளை தற்பொழுது இந்தியாவில் தங்கியிருந்து அரசியல் தலைவர்களைச் சந்தித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதற்கு இன்னமும் அனுமதி பெறவில்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

புதுடில்லியில் இருக்கும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அங்கிருக்கும் அரசியல் தலைவர்களை உத்தியோகபூர்வமாகவும் உத்தியோக பூர்வமற்ற வகையிலும் சந்தித்து வந்தாலும் பிரதமரைச் சந்திப்பதற்கு இன்னமும் அவர்கள் அனுமதியெடுக்கவில்லை யென்றார் அவர். (ச-5)

## ஜனாதிபதிக்கு...

தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின்போது ஐ.தே.கட்சி சார்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு பாராட்டு தெரிவித்துள்ளார். அவசரகாலச் சட்டமல்ல, வேறு எந்தச்சட்டத்தைப் பயன்படுத்தியேனும், எஞ்சியுள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுங்கள். நாம் பூரண ஆதரவு வழங்குவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## அமைச்சர்...

விவகார அமைச்சு குறிப்பிட்டது.

ஜப்பான் விசேட பிரதிநிதி யசூஷி அகாசி வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டதுடன் அங்கு விசேடகலந்துரையாடல்களிலும் கலந்து கொண்டார். (ச-3)

## பொருட்களை ஏற்றிய...

வணிகர் கழகத்தின் அனுமதி பெற்ற பின்னரே நாவற்குழியில் இருந்து பொருட்களை எடுத்து வரலாம் என வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து லொறிகள் மூலம் கொண்டு வரப்படும் பொருட்கள் நாவற்குழியில் இறக்கியபின் அவ் லொறிகள் மூலமே குடாநாட்டின் உள்ளூர் உற்பத்திகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் பழைய இரும்புகள் உட்பட ஏனைய உலோகங்கள், உலோகத்தால் ஆக்கப்பட்ட சிலைகள் என்பன எடுத்துச் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் கொழும்பிற்கு பொருட்கள் கொண்டு செல்வதற்கான உதவிகள் தேவைப்படின் வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டால் அதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும் என வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (ச-7)

## இலங்கைத் தமிழர்...

வெளியிட்டார். அதில், சேது சமுத் திரத் திட்டம் பற்றிய பேச்சே இல்லை. அது மட்டு மல்ல அ.தி.மு.க. அணி சார்பில் ஒரு ஆட்சி வந்தால் சேது சமுத்திர திட்டத்தையே ரத்து செய்வோம் என மமதை பொங்க கர்ஜித்தார். இந்த இரண்டையும் படித்துவிட்டு தமிழக மக்கள் என்ன நினைத்தார்களோ தெரியாது.

தேர்தலின்போது "நானும் தமிழீழம் கேட்கிறேன்" என முரசு கொட்டியவர், இப் போது எங்கே புகுந்துள்ளார்? கொடை நாடு குகைக்குள் ஒளிந்துகொண்டு எனக்குச் சவால் விடுகின்றார். "முதல்வர் கருணாநிதிக்கு தமிழர்களைப் பற்றி அறவே கவலை இல்லை" என்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்காக நான் நிதி கேட்டு தமிழக மக்கள் உதவிய தொகை 50 கோடி ரூபாயிற்கு மேல். அதில் 25 கோடி ரூபாயிற்கு பாதிக்கப்பட்ட தமிழர்களிற்கு உணவு, உடை, மருந்து ஆகியவை வாங்கி செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. மீதம் 25 கோடி ரூபாயை மத்திய அரசின் மூலம் இலங்கைத் தமிழர் மறுவாழ்விற்கு அனுப்பி வைக்க உறுதியளித்துள்ளோம்.

தி.மு.க எம்பிக்கள் அனைவரும் பிரதமரையும் சோனியாவையும் சந்தித்து இலங்கைத் தமிழர் மறுவாழ்வுப் பணிகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும், நிவாரணத் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

நானும் கடிதங்கள், தந்தி மூலம் கேட்டுள்ளேன். மத்திய அரசு 500 கோடி ரூபாய் அளித்துள்ளது. ஆனால் ஜெயலலிதா; இலங்கைத் தமிழர்கள் பற்றி கருணாநிதி வாய் திறக்க வில்லை என வடிகட்டிய பொய்யைக் கூறியுள்ளார்.

பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டுவர சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியவர் இந்த ஜெயலலிதா. அனைத்துக்கட்சிக் கூட்டம், டெல்லி [illegible]ன்றது, மனிதச் சங்கிலி அனைத்தையும் புறக்கணித்து விட்டு தேர்தல் நேரத்தில் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை கொண்டவர் போல செயல்பட்டதை தமிழக மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

இதில் உலக அதிசயம் என்னவென்றால், அவரே நம்பமுடியாத ஒரு பொய்யை அவரே எழுதி அறிக்கையாக வெளியிட்டிருப்பது தான். அதை விட உலக அதிசயம், இங்குள்ள சிலர் அதை நம்பி இலங்கைத்தமிழர் மீது ஜெயலலிதாவுக்குத்தான் அக்கறை என்று கூறினால், அதுதான் உலக மகா அதிசயம் இவ்வாறு முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். (ச-5)

## கூட்டமைப்பினருக்கு விடு...

உறுப்பினர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படும் இவர்களுக்கு விடுமுறை வழங்கப்படக் கூடாது எனக் கூறினார்.

அரசியலமைப்பிற்கும் நாட்டின் இறைமைக்கும் புறம்பாக செயற்படும் உறுப்பினர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவது ஏற்புடையதல்ல எனவும் விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் செல்லும் இவர்கள் அங்குள்ள ஊடகங்களில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் விடுமுறை பெற்று வெளிநாடு செல்லும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு என்ன நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கோரிக்கை விடுத்தார்.

கடந்த காலங்களில் விடுமுறை வழங்கப்பட்டிருந்தபோது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இரு தரப்புக்குமிடையில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றதாக நாடாளுமன்ற செய்திகள் தெரி விக்கின்றன. இதன் பின்னர் கருத்துத் தெரி வித்த சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம்.லொக்குபண்டார, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களின் விடுமுறைக்கு சபை அனுமதி வழங்கா விட்டால் விடுமுறை வழங்கமுடியாது எனக் கூறினார்.

அத்துடன் த.தே. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குவிடுமுறை வழங்கும் விடயத்தை மீளாய்வு செய்வதற்கும் சபை இணங்கியது. (ச-5)


### தொழிற்பயிற்சிகள்

* Mobile Phone repairing
  Hardware Phone Lock
  Software Hardware Repairing (காலம் 2 மாதம்)
* றேடியோ , ரெலிவிசன் , வீடியோ டெக் றிப்பியறிங்
  றேடியோ , வீடியோ டெக் ,DVD Player
  ரெலிவிசன்,CD Player,Amplifier

திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்

* ஏயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்களும் திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.

*புதிய பயிற்சிகள் ஆரம்பம்14/06/2009 ஞாயிறு 10am.*

குறிப்பு:-தொழில் புரிவோர்களுக்காக இம்முறை சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.,45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோவில் முன் வீதி) யாழ்ப்பாணம். ☎ 021 222 6434

NEW ASIAN CENTER (வர்த்தக வங்கி முன்பாக) 56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎ 0718561654,0779254078

(C-2569)


## ஐ.நா. செயலாளரின் பேச்சு...

பிரிட்டனும் பிரான்ஸும் இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. அதன் விளைவாகவே அண்மை யில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விவகாரத் தில் பொறுப்புத் தன்மை மற்றும் வெளிப் படைத் தன்மை குறித்து பேசியுள்ளது என்று மனித உரிமைகள் அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப் பாளருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கம் முன் வைத்த பிரேரணை அண்மையில் அமோக வெற்றியீட்டியது.

இந்நிலையில் இலங்கையை அசௌகரியத்துக்கு உள்ளாக்க மேற்குலக நாடுகள் எடுத்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. முக்கியமாக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் எடுத்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

எனவே குறித்த இரண்டு நாடுகளும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு அழுத்தம் விடுக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கலாம். காரணம் மனித உரிமை பேரவையில் பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் 47 நாடுகளில் 2 நாடுகளாக உள்ளன.

ஆனால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் பிரிட்டனும் பிரான்ஸும் ஐந்து நாடுகளில் இரண்டு நாடுகளாக பலம் பெருந்தியுள்ளன. அங்கு அந்த நாடுகளுக்கு அதிக பலம் உள்ளது என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகவே உள்ளன.

எமக்கு முன் வருகின்ற சவால்களுக்கு நாங்கள் முகம் கொடுக்கலாம். மேலும் பிரிட்டனில் விரைவில் பொதுத் தேர்தல் நடை பெறவுள்ளது என்பதனையும் நாம் மறந்து விடக்கூடாது. தேர்தலை இலக்கு வைத்து இலங்கை மீதான அழுத்தத்தை அதிகரிக்க முயற்சிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.